191

# ஐக்கிய அரசு

மலர்-1 இதழ்-3

மார்ச்-1934.

JL
V1NM,N34IK.
N34.1.3.
148727

# ஐக்கிய அரசு

## (Co-operative Commonwealth)

MONTHLY ORGAN OF

THE YOUNG CO-OPERATORS LEAGUE

மலர் 1. மார்ச்சு. இதழ் 3.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 OCT 1934
MADRAS

பொருளடக்கம்.

| | | பக்கம். |
|---|---|---|
| 1. | இளநீரை அருந்துங்கள் ... ... | 1 |
| 2 | கூட்டுறவின் நன்மை ... ... | 5 |
| 3. | கிராமங்களின் தற்கால நிலைமை ... ... | 15 |

காரியாலயம் :

29, கீழ ஆண்டார் வீதி,

தெப்பக்குளம், திருச்சினுப்பள்ளி.

1934

# "ஐக்கிய அரசு"

## யௌவன கூட்டுறவாளர் சங்க சஞ்சிகை.

போஷகர் :

டாக்டர் ஏ. மதுரம்.

சங்கத் தலைவர் :

P. B. K. ராஜா சிதம்பரம்.

காரியதரிசி :

என். எஸ். கோவிந்தசாமி.

கௌரவ ஆசிரியர் :

எஸ். ஜெ. ரெத்தினசாமி, M A., B.L.



### சந்தா விபரம்.

| | |
|---|---|
| உள்நாடு வருடம் 1-க்கு | ரூ 5—0—0. |
| வெளிநாடு ,, | ரூ 6—0—0. |

முன் பணமின்றி பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

10 பத்திரிகைகளுக்கு சந்தாதார்களைச் சேர்த்து அனுப்புவோருக்கு ஓர் பத்திரிகை அனுப்பிவரப்படும்.

### விளம்பர விகிதம்.

| | |
|---|---|
| 4 வது பக்கம் அட்டை | ரூ. 30—0—0. |
| 3 வது பக்கம் அட்டை | ரூ. 25—0—0. |
| சாதாரண விளம்பரம் பக்கமொன்று | ரூ. 20—0—0. |

முன் பணமின்றி விளம்பரம் ஏற்கப்படமாட்டாது விளம்பரத்தை அங்கீகரிக்கவோ மறுக்கவோ மானேஜருக்கு உரிமையுண்டு.



# ஐக்கிய அரசு

(CO-OPERATIVE COMMONWEALTH)
STANDS FOR
BETTER FARMING, BETTER BUSINESS, BETTER LIVING.

1934 மார்ச்சு திருச்சி


# இளநீரை அருந்துங்கள்

நம்மாகாணத்தில் தேங்காய் வியாபாரம் மிகவும் பிரதானமானது. இதுகாலை இவ்வியாபாரம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஐந்து வருடங்களாக தேங்காய் விலை குறைந்திருப்பதானது விவசாயிகளிடையே பெரும் கலவரத்தை உண்டுபண்ணி இருக்கிறது. நாட்டின் பல பாகங்களிலும் ஆயிரக்கணக்கான ஏக்கர் விஸ்தீர்ணமுள்ள நிலங்களில் தென்னைமரங்கள் பயிரிடப்பட்டிருப்பதும், இவை இருஷிகளுக்கு ஜீவாதாரமாக இருப்பதும் சகலரும் அறிந்ததே. மேலும், சுமார் 12 ஆண்டுகளுக்கு முன்னர் தேங்காய் விலை அதிகமாக இருக்கும்போது, தேங்காய்க்குத் தேவை இருந்தபோது, பலர் தென்னையை விருத்திசெய்யலாயினர். இது காரணமாக இன்றையதினம் ஏராளமான தென்னைமரங்கள் இருப்பதுடன் தேங்காய்கள் அதிகமாக உற்பத்தியாகின்றன. இதன்மூலம் பலவகையிலும் கைத்தொழில் விருத்தியடையலாயிற்று. தேங்காய்ப்பருப்பு எடுத்தல், கயிறு திரித்தல், பாய் நெய்தல், எண்ணெய் உற்பத்தி செய்தல் போன்ற தொழில்கள் வளர்ச்சியடைந்தன. இத்துறையில் இத்தொழில் விருத்தி அடைய இன்னும் பல நவீன முறைகளைக் கையாளவேண்டி இருக்கிறது ஆனால் துரதிருஷ்டவசமாக சர்க்கார் இது விஷயத்தில் அக்கறை காட்டுகிறார்களில்லை இத்தொழில் விருத்தி அடைய தக்கன எதுவும் இதுவரை செய்யப்படவுமில்லை. இங்ஙனமிருக்க, தேங்காயின் விலை நாளுக்கு நாள் குறைந்து வருவது விவசாயிகளின் அடிவயிற்றில் அனலை வைத்ததுபோல் இருக்கிறது. இதற்குக் காரணம் இலங்கையின் தேங்காய் இந்நாட்டில் இறக்குமதி செய்யப்படுவதாகும். ஒட்டவா மகாநாட்டின் ஆசீர்வாதத்தைப் பெற்ற இலங்கை தனது தேங்காயை தங்குதடையின்றி இந்நாட்டில் இறக்குமதி செய்துவருகிறது. தெளிவாகப் புள்ளி விவரத்துடன் கூறுமிடத்து 1931—32-ம் ஆண்டில் 117 டன் கொப்பரை (தேங்காய் பருப்பு) இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. 1932—33ல் கொப்பரை இறக்குமதி 5853 டன் ஆக அதிகரித்திருக்கிறது. இவ்வாண்டில் கடந்த வருடத்தைப் போல் இறக்குமதியின் அளவு இருக்குமென ஊகிக்க வேண்டி இருக்கிறது. இதுதவிர, 1929-30-ம் ஆண்டில் 409 காலன் தேங்காய் எண்ணெய் இறக்குமதி ஆகியுள்ளது. 1932—33ல் எண்ணெயின் இறக்குமதி 3,64,370 காலனாக அதிகரித்து விட்டது. இது சம்பந்தமாக மிகவும் முக்யமாக கவனிக்கவேண்டியதொன்றுள்ளது, அதாவது,

இலங்கையின் தேங்காயிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் இந்தியத் தேங்காய் எண்ணெயைப் போன்று உயர்ந்த தரமானதாக இல்லை என்ற ஒரு அபிப்பிராயம் இருந்து வருவதாகும். இது உண்மையாக இருக்குமானால், இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படும் தேங்காயானது எண்ணெய் எடுப்பதின் பொருட்டு உபயோகப்படுத்தப் படுமானால் இந்நாட்டின் உயர்ந்த எண்ணெயின் நற்பெயர் கெடுவதுடன் விலையிலும் மந்தம் ஏற்படக்கூடும். இலங்கை எண்ணெயின் இறக்குமதியால் இந்நாட்டின் எண்ணெய் வியாபாரம் பாழாகும். இந்நாட்டின் விவசாயிகளின் நலத்தையும், தொழிலாளர்களின் க்ஷேமத்தையும் கருதி சர்க்கார் தாமதமின்றி தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றனர். இந்திய அரிசிக்கும், கோழி முட்டைக்கும் காப்புவரி விதித்துள்ள இலங்கை தனது தேங்காயையும் எண்ணெயையும் இந்நாட்டில் இறக்குமதி செய்துவருவதை சர்க்கார் அனுமதிப்பதானது விந்தையிலும் விந்தையே. இது விஷயத்தில் சர்க்கார் கண்ணோட்டம் செலுமா என்பதை அறிய ஆவலுள்ளவர்களாக இருக்கிறோம். கூடுமானால் இலங்கையின் தேங்காய் அடியோடு தடுக்கப்படவேண்டும்; அன்றேல் 1929ம் ஆண்டில் இருந்ததுபோல் காப்பு வரி 100-க்கு 25 விகிதம் உயர்த்தப்படவேண்டும். இம்மாகாணத்தின் தென்னைத் தோட்டக்காரர்களைக் காப்பாற்ற இந்திய சர்க்காரை அனுசரித்து மாகாண சர்க்கார் ஓர் ஏற்பாடு செய்வார்களென எதிர்பார்க்கிறோம். அவ்விதமின்றி மௌனம் சாதிப்பார்களாகில் இம்மாகாணத்தின் விவசாயிகளும், கைத்தொழிலாளர்களும் திண்டாட நேரிடும் என்பதை சர்க்கார் குறித்துக் கொள்வார்களாக!

நிற்க, தேங்காய் வியாபாரத்தை விருத்தி செய்வதில் பொது ஜனங்கள் பெரிதும் கடமைப்பட்டிருக்கின்றனர். பொதுஜனங்கள் தங்களின் கடமையை உணர்ந்தாலன்றி இவ்வியாபாரம் பண்டைய உச்ச நிலைக்கு வருவது எளிதான காரியமல்ல. நம்நாட்டில் நகரங்கள் தோறும், கிராமங்கள் தோறும், சோடா, கலர், கடைகள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. நோயாளிகள் தான் சோடா குடிக்கிறார்கள் என்பதில்லை. தாக சாந்தியை உத்தேசித்து சகலரும் சோடா கலர் போன்ற பானங்களைப் பருகுவது சர்வ சாதாரணமாக இருக்கிறது. அத்தகையோர் சோடாவையோ, கலரையோ உண்பதைக் காட்டிலும் இளநீரை அருந்தி இயற்கை இன்பத்தை ஏன் அனுபவித்தல் கூடாது. இளநீரில் உள்ள இனிய சுவையைக் கலரில் காண்பது அரிதென்பதை எவரும் மறுக்க முடியாது. மேலும், இளநீர் தேக ஆரோக்கியத்திற்குகந்த தென்றும், புஷ்டியைக் கொடுக்கும் சத்து நிறைந்ததென்றும் பிரபல வைத்திய நிபுணர்கள் கூறுகின்றனர். ஆனால் நம்மில் பலர் இளநீரைப் புறக்கணித்து, சோடாவையும், கலரையும் நாகரீகப்பானமாகக் கருதி உண்கின்றனர். இவ்விதம் செய்வோரை வெட்டி ஜம்பக்காரர்களென நாம் கூறுவோமானால் அதில் தவறென்ன இருக்கிறது. ஓர் அணா கொடுத்து ஓர் கலர் அருந்துவதைவிட, அரை அணாவுக்கு ஓர் இளநீர் சாப்பிடுவதால் செலவு குறைவதுடன் கிருஷிகளின் வருமானம் பெருகுகிறது என்பதை நாம் அதிகம் கூறத்தேவை இல்லை. எனவே, பொதுஜனங்கள் நாட்டின் நலங்கருதி இளநீர் அருந்தும் பழக்கத்தைக் கைக்கொண்டு தாங்களும் இன்புற்று நாட்டையும் மேன்மையடையச் செய்வார்களாக!

மேலும், விவசாய விருத்தியை யுத்தேசித்து அருஞ்சேவை புரிந்து வரும் திருச்சி ஜில்லா விவசாயச் சங்கத்தை நாம் இது சமயம் குறிப்பிட விரும்புகிறோம் இச்சங்கத்தார் ஆண்டுதோறும் பொருட் காட்சி மூலம் செய்துவரும் நற்றொண்டினைப் போற்றுகிறோம். "இளநீரை அருந்துங்கள்," என நவீன முறையில் சுவரொட்டிகள் மூலமும், துண்டுப் பிரசுரங்கள் மூலமும், இச்சங்கத்தார் பிரசாரம் செய்ய முற்படுவார்களாகில் மக்களின் மனப்பான்மையில் மாறுதலை உண்டு பண்ணலாமென நம்புகிறோம். இளநீரை அருந்தும் பழக்கத்தை மக்களிடையே எளிதில் புகுத்தலாமென நாம் எதிர்பார்க்கிறோம். இப்பணியை ஏற்று நடத்துமாறு தமிழ் நாட்டு விவசாயச் சங்கங்களைப் பொதுவாகவும், திருச்சி ஜில்லா விவசாயச் சங்கத்தாரைக் குறிப்பாகவும், நாம் கேட்டுக் கொள்ளுகிறோம்.



## பீகார் பூகம்ப நிவாரணம்

பூகம்பத்தினால் சேதமடைந்த பீகார் மாகாண நிலைமையை அறியாத இந்தியர்கள் இருக்கமாட்டார்கள். இயற்கை அன்னையின் எழுச்சியினால் ஒரு மாகாணம் சில நிமிஷங்களில் பாழாகி விட்டது. பென்னம் பெரிய மாளிகைகளெல்லாம் தரை மட்டமாயின; குடிசைகள் இருந்த இடம் தெரியவில்லை. அழகிய கழனிகளும், தோப்புகளும் இருந்த இடங்களிலே ஏரிகள் தோன்றி இருக்கின்றன. நஞ்செய், புஞ்செய் செழிப்புற்றிருந்த பிரதேசம் முழுவதும் இருக்குமிடம் தெரியவில்லை. குன்றுகள் இருந்த இடங்களில் குழிகளும், குழிகள் இருந்த இடங்களில் குன்றுகளும் தோன்றி நாட்டின் காட்சியையே அடியோடு மாற்றி விட்டது உயிர் துறந்த மக்களுக்கும், கால் நடைகளுக்கும் கணக்கில்லை. ஆகவே, பீகார்பூகம்ப நிவாரணப் பிரச்சினை இதுபொழுது ஒரு உலகப்பிரச்சினையாக இருந்து வருகிறது. தங்க நிழலும், குந்த குடிசையும் இல்லாமல் தவிப்போருக்கு இடவசதி அளிக்கவேண்டும். உடைமைகளை இழந்து பாதவிப்போருக்கு உண்ண உணவும், உடுக்கத் துணியும் அளிக்கவேண்டும். நோய்வாய்ப்பட்டோருக்கு வைத்திய உதவி புரியவேண்டும். சேதமடைந்த மாளிகைகளை பழுதுபார்க்க வேண்டும். பாழாய்ப்போன கட்டிடங்களைப் புதிதாய் அமைக்கவேண்டும். இந்த வேலைகளுக்குக்கணக்கில்லாதபணம் தேவையாக இருக்கிறது. பீகார் புனருத்தாரணத்திற்கு சுமார் 5 கோடி ரூபாய் செலவு பிடிக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. ராஜப்பிரதிநிதியின் ஆதரவில் ஒரு நிவாரண நிதி திரட்டப்படுகிறது. பாபு ராஜேந்திரப் பிரசாத் முயற்சியினாலும் ஒரு நிதி சேர்க்கப்படுகிறது. லண்டன் லார்ட் மேயரும் ஒரு நிதி திரட்டுகிறார். உலக முழுதுமிருந்தும் பீகாருக்கு நன்கொடைகள் வருகின்றன. இருந்தாலும் இதுவரை ஒரு கோடிகூட வசூலாகவில்லை. சர்க்கார் லட்சக்கணக்காக நன்கொடை அளித்ததும் தவிர லட்சக் கணக்காகக் கடன்கொடுத்து உதவவும் தீர்மானித்திருக்கின்றனர். இவ்வாறெல்லாம் முயற்சிகள் செய்யப்பட்டாலும் புனருத்தாரணத்துக்குத் தேவையான பணம் இன்னும் வசூலாகவில்லை. சர்க்காரும், தனவந்தர்களும் மட்டும் உதவி அளித்தால் போதாது. மக்களாய் பிறந்த ஒவ்வொருவரும் அந்தரங்க சுத்தியுடன் உதவியளிக்க முன்வரவேண்டும் பீகார் மாகாணத்திற்கு உதவுவதைவிடப் பெரிய தருமம் வேறே இல்லை.

இந்த சந்தர்ப்பத்தில் கூட்டுறவாளர் கடமை என்ன? இந்தியாவிலே இப்பொழுது சுமார் ஒரு லட்சம் கூட்டுறவுச் சங்கங்களும், 600 மத்திய கூட்டுறவு பாங்குகளும், 10 மாகாண கூட்டுறவு பாங்குகளும் இருந்து வருகின்றன. இந்த ஸ்தாபனங்களெல்லாம் பீகார் நிதிக்காக பொருள் வசூல் செய்ய முன்வந்தால் பெருந்திரளான பணம் சேர்வது திண்ணம். பெரும்பாலான கூட்டுறவுச் சங்கங்கள் தம்வருமானத்தில் ஒரு பகுதியைப் பொது நலத்துக்காக ஒதுக்கி வைப்பதுண்டு. வருந்தியவர்களுக்கு உதவியளிப்பதே இந்த பொதுநல நிதியின் நோக்கம். சட்டமும் இதற்கு அனுமதி அளிக்கிறது. ஆகவே, ஒவ்வொரு கூட்டுறவு ஸ்தாபனமும் இந்த பொதுநல நிதியின் பெரும் பகுதியை பீகார் நிவாரண வேலைகளுக்கு வழங்கலாம். பொதுநல நிதி முழுமையையும் பீகார் உதவி நிதிக்கு வழங்கினாலும் குற்றமில்லை. ஆகவே, சென்னை மாகாண கூட்டுறவாளர்கள் இது விஷயத்தில் கவனம் செலுத்துவார்களென நம்புகிறோம்

148727
JL
VINM

## சாஸ்திரியார் உபதேசம்

ஆட்சியின் கீழ் சட்ட மெம்பர் பதவிக்கே ஓர் தனிப்பெருமை ஏற்படுமென எதிர்பார்க்கிறோம். சிவகங்கை கூட்டுறவு பாங்கின் காரியலாயத் திறப்புவிழா மகாகனம் வி. எஸ். ஸ்ரீனிவாசசாஸ்திரி அவர்களால் சென்ற மார்ச்சு௴ 29௳ நடத்தப்பட்டது. அப்பொழுது அவர் கூட்டுறவாளர்களுக்குச் செய்த சில உபதேசங்களைக் கூட்டுறவு இயக்கத்தில் பற்றுடையவர்களெல்லாம் கவனிக்கவேண்டியது மிகவும் முக்கியமாகும். கூட்டுறவு பாங்குகளில் சேருகிறவர்கள் சுயநலங்கருதிச் சேரக்கூடாதென்று முதற்கண் மகாகனம் சாஸ்திரியார் எச்சரிக்கை செய்தார். சிவகங்கை நகர கூட்டுறவு பாங்கி டைரக்டர்கள் பாங்கியிலிருந்து கடன் வாங்குவதில்லை என்று தாமாக ஒரு நிபந்தனை ஏற்படுத்திக் கொள்ளவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். மகாகனம் சாஸ்திரியின் அந்த அபிப்ராயம் மிகவும் பொருத்தமானதாகும். ஏழை எளியோருக்கு உதவி செய்வதே கூட்டுறவு பாங்குகளின் பிரதானமான நோக்கம். எனவே, பாங்கு நிர்வாகம் நடத்தும் பணக்காரர்களே பாங்கிப்பணத்தை உபயோகித்தால் கூட்டுறவு இயக்கத்தின் லக்ஷ்யமே அவமதிக்கப்பட்டு விடும். தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் இயல்புடையோரே கூட்டுறவு பாங்குகளில் ஈடுபடவேண்டும். இந்த நல்லெண்ணம் கூட்டுறவு பாங்குகளில் ஈடுபடுவோர் உள்ளத்தில் எல்லாம் உதயமாகுமாயின் கூட்டுறவு இயக்கம் வெற்றி பெறுவது நிச்சயம். மேலும், மகாகனம் சாஸ்திரியார் கூறியதாவது:—

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்கள் நான்கில் அறத்தையும் பொருளையும் கைவல்யப்படுத்தக் கூடியது கூட்டுறவு இயக்கம். பணத்தை மக்கள் பலவாறாகக்கையாடி வருகிறார்கள். அநேகர் பணத்தைச் சேர்த்து வைக்கிறார்கள். பலர் சூதாட்டத்தினாலும், மோசடியினாலும் பணத்தை இழக்கிறார்கள். இவர்களுடைய நோக்கமெல்லாம் பொருளீட்டுவதே யாகும். கூட்டுறவு இயக்கம் தோன்று முன் சுயநலங் கருதியே மக்கள் பணம் தேடி வந்தார்கள். பிறர் துன்பங்களை அறியாதவர்களும், பிறர்க்கு உதவி புரிய வேண்டுமென்ற எண்ணமில்லாதவர்களும் தாராளமாய் பணம் சேர்த்து வாழ்ந்து வந்தார்கள். மெய்யாகவே பணம் தேவையாயுள்ள எளியோர் கதியற்றுத் தவித்தார்கள். பலரிடம் ஏராளமாக பணம் இருக்கிறது. பொருள் உள்ள இடத்திலேயே இன்பம் உண்டென்பார்கள். ஆனால் துரதிருஷ்டவசமாக இந்தியாவிலே பொருள் உள்ள இடத்தில் இன்பத்தைக் காண்பதற்கில்லை. சீமான்களெல்லாம் சந்துஷ்டியாய் வாழ்வதாய்ச் சொல்லிவிட முடியாது. ஏன்? பணத்தை வழங்கும் முறைகள் அவர்களுக்குத் தெரியாது. உண்மை இன்பத்தையும் அவர்கள் அறியார்கள்.

## வரவேற்கிறோம்

மாகாண சர்க்காரின் மாஜி மந்திரியாகவும், தென் ஆப்ரிகாவில் இந்திய சர்க்காரின் ஏஜண்டாகவும் இருந்தவரும், சென்னை கூட்டுறவு இயக்கத்தின் மூல புருஷருமான சர். கெ. வி. ரெட்டி அவர்கள் சட்ட மந்திரியாக நியமனம் பெற்றுள்ளதை அறிய மகிழ்ச்சி அடைகிறோம். சர். கெ. வி. ரெட்டி அவர்களுக்கு சட்ட மந்திரி பதவிகிடைத்துள்ளது கூட்டுறவாளர்களுக்கு ஒரு பெருமையாகும். இப்பெரியாரின் ஆழ்ந்த அறிவையும், அஞ்சா நெஞ்சத்தையும், தனக்கின்றி பிறர்க்கென வாழும் தன்மையையும், பாராட்டாதவர்கள் எவருமில்லை. சட்டமந்திரி பதவி கிடைக்கவேண்டுமென பலவாறு பல்டி அடித்த பயில்வான்கள் பலரை நாம் அறிவோம். ஆனால் திரு. ரெட்டியார் பதவி வெறிபிடித்து தம் கொள்கையைக் காற்றில் பறக்கவிட்டவரன்று. அன்றும், இன்றும், என்றும் உறுதியான மனதுடன் இருக்கும் ஒரு சிலரில் திரு. ரெட்டியார் முதன்மையானவர். இப்பெரியாரின்



# கூட்டுறவின் நன்மை

ஒ. எ. நாராயணசாமி அய்யர் பி.எ., பி.எல், தஞ்சை.

[திரு. நாராயணசாமி அய்யர் தஞ்சை ஜில்லாவில் சிறந்ததோர் கூட்டுறவாளர். தஞ்சை ஜில்லா மத்திய பாங்கின் டைரக்டராகவும், தஞ்சை கூட்டுறவு மேற்பார்வை யூனியன் காரியதரிசியாகவுமிருந்து இவர் அருஞ்சேவை புரிந்துள்ளார். கூட்டுறவு இயக்க வளர்ச்சியைக் கருதி எளிய நடையில், கிராமவாசிகள் பேசும் இயற்கைத் தமிழில், இனிய முறையில், இவர் எழுதியுள்ள நாடகம் யௌவன கிறிஸ்துவ வாலிப சங்கப்போதுக் காரியதரிசி திரு. கே டி. பால் போன்றோர் மதிப்புரையைப் பெற்றுள்ள தென்றால் இதன் பெருமையை நாம் அதிகம் விரித்துக் கூறத்தேவை இல்லை. திரு. அய்யர் அவர்களுக்கு நமது நன்றி என்றும் உறியதாகுக ப—ர்]

### ஆசிரியர் முன்னுரை

நம்நாட்டில் பெரும் பான்மையோர் விவசாயத்தைக் கொண்டே ஜீவனம் செய்கிறார்கள். கூட்டுறவு இயக்கமானது அவர்களுக்கு உண்மையிலேயே உதவிபுரிய வேண்டுமாயின் அத்தொழிலை அவர்கள் செவ்வனே செய்து, அதன் பலனை பூர்ணமாக அடையும்படி செய்யவேண்டும். அதற்காக முதலில் கிருஷிகளுக்கு பயிர்த்தொழிலைத் துவக்க முதல் கொடுத்து உதவ வேண்டும். அதாவது, நிலத்தைச் செப்பனிட்டு, சரியானபடி எரு, உரம் முதலியன போட்டு, உழுவதற்கு வேண்டிய கலப்பை மாடு முதலியவற்றை வாங்க இலகுவான வட்டிக்கு நாணயம் கொடுக்கவேண்டும். இதற்காகவே, கூட்டுறவு நாணயச் சங்கங்கள் ஏற்பட்டுள்ளன. இம்மாதிரி சிரமப்பட்டு பயிர் செய்யும் தானியத்தைத் தகுந்தபடி விலைக்குப் போட்டாலொழிய கிருஷிகன் பட்ட சிரமத்திற்கெல்லாம் பலனை அடைகிறானில்லை. அறுவடைகாலத்திலும், அதற்கு இரண்டு மாதத்திற்குள்ளும், தானியங்களின் விலை மிகவும் குறைவாயிருக்கிற தென்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். அச்சமயத்திலேயே அவன் அரசாங்கத்தாருக்கு கிஸ்தி செலுத்த வேண்டியிருக்கிறது. இம்மாதங்களிலேயே நம் தேச வழக்கப்படி கலியாணம் முதலியன செய்யவேண்டி நேரிடுகிறது. இன்னும் ஆரம்ப விவசாயத்திற்காக வாங்கி இருக்கும் தொகைகளுக்கும் வட்டி முதலியன செலுத்தவேண்டி இருக்கிறது. மேலே சொன்ன தொல்லைகளைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டு அவன் தனக்குக் கிடைத்த தானியத்தை எப்படியாவது விற்றால் போதுமென்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டு விடுகிறது.

இவ்விதம் பணமுடை அதிகமாயுள்ள எளிய விவசாயிகள் ஒரு புறமிருக்க, மற்றொரு பக்கம், கையில் நிறைய ரொக்கம் வைத்துக்கொண்டு காத்திருக்கும் முதலாளிமார்கள் அவர்களுடைய முடையைக்கொண்டு தாங்கள் லாபமடையப் பிரயத்தனப்படுகின்றனர். இவர்களில் பலர் சாகுபடி காலத்திலேயே, கண்டி முதலாகும் மூட்டைகளை தங்களிடமே விக்கிரயம் செய்யவேண்டுமென்ற நிபந்தனையின் பேரிலேயே, கடன் கொடுக்கிறார்கள். இவ்விதம் செய்வதினால் மிகவும் பிரயாசைப்பட்டு எழுப்பி பாதுகாத்து வந்த மாகுலை எளிய விவசாயி தன்னுடைய தென்று சொல்லும் உரிமையையுமிழந்து அதைத் தன் இஷ்டப்படி விற்று அதன் பலனை பூரா அடையச் சக்தியற்றவனாகிறான். நியாயப்படிக்குத் தான் பட்ட சிரமத்திற்குக் கூலியாக விவசாயி அடைய வேண்டிய லாபத்தை கையில் பணச்செருக்குள்ள முதலாளி அப்பணத்தின் சக்தியால் மட்டும் ஒருவித கஷ்டமின்றி அடைகிறான். இவ்விதம் பரிதவிக்கத்தக்க நிலையினின்றும் அவர்களை மீட்க வேண்டுமென்பதே கூட்டுறவாளரின் நோக்கம். சாதாரணமாய் கிராம நாணயச் சங்கங்களில் பலவற்றில் ரிஜிஸ்திரார் சர்குலர்படி தான்னியக் கொதுவையின் பேரில் கடன் கொடுக்கும் பொருட்டு 44 எ என்றொரு புதிய விதி சேர்க்கப்பட்டிருக்கிறது. அதன்படி ஓர்

அங்கத்தினருக்கு அவர் ஈடாக வைக்கும் மாசூலின் காலக்கிரயத்தில் ரூ. 100-க்கு 75-க்கு அதிகப்படாத தொகையைக் கடனாகக் கொடுக்கலாம். கூடியவரையில் அப்பொருளைச் சங்கத்தின் பஞ்சாயத்தார்கள் தங்கள் பொறுப்பின் பேரிலேயே பந்தோபஸ்து செய்து வைக்கவேண்டும். இவ்விதக் கடன்களுக்கு பங்குத் தொகையின் பேரில் ஏற்பட்டுள்ள வரம்பு கிடையாது. இன்னும் இம்மாதிரி கொதுவை வைக்கப்படும் பண்டங்களை ஒருமிக்க சேர்த்து விற்பதற்கும் ஏற்பாடு செய்து அதற்காக அந்த அங்கத்தினர்களிடமிருந்து பஞ்சாயத்தார்கள் அதிகாரம் பெற்று விலையாக்கிக் கொடுக்கலாம். இவ்விதம் தான்னியக் கொதுவைக்கடன் பிரபலமானால், கிராமச் சங்கங்களிலுள்ள கெடுக்கடந்த வட்டி முதல் பாக்கிகளும் மிக எளிதாகக் குறையும்.

ஆயினும், இம்மாதிரிக் கொதுவைக் கடன்கள் கொடுக்க எல்லாக் கிராமச்சங்கங்களிலும் தகுந்த சௌகரியங்கள் கிடையாது. ஆகவே, ஒரு பிரதேசத்திலுள்ள எல்லாப் பண்டங்களையும் சேர்த்து தகுந்தபடி ஜாக்கிரதை பண்ணி, விற்பனை செய்து கொடுத்துவரவேண்டுமென்ற எண்ணத்துடனேயே, அருகாமையிலுள்ள ஒரு ஸ்தலத்தில், பிரத்தியேகமாய் கொதுவை, விற்பனை முதலிய வற்றிற்காகவே தனிக்கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்பட்டுள்ளன. இப்படிப்பட்ட சங்கங்களுக்கு, பண்டங்களை பந்தோபஸ்து செய்து வைக்கக் கிட்டங்கிகள் கட்டிக்கொள்ளும் பொருட்டு அரசாங்கத்தாரால் இலகுவான வட்டிக்கு பலவருடங்களில் கொஞ்சம் கொஞ்சமாய் திருப்பிக் கொடுக்கலாமென்ற நிபந்தனையுடன் கடனும் கொடுக்கப்படுகிறது. இவ்விதச் சங்கங்கள் பல எங்கும் ஏற்பட்டு பரவும் பக்ஷத்தில் விவசாயிகளுக்கு எவ்வளவு தூரம் அவை தன்விருத்திக்கு ஏதுவாயிருக்குமென்பதைப்பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. எவ்விதம் ஓர் எளிய விவசாயி அறுவடையான தான்னியத்தை உடனே விற்பனை செய்யாமல் கூட்டுறவுச் சங்கத்தில் கொதுவையாக வைத்து கடன் வாங்கி மிகவும் அவசியமான தொல்லைகளைத் தீர்த்துக்கொண்டு, பிற்பாடு தகுந்த விலை வரும்போது, பொதுவிலே விற்பனை செய்து, அதன் பலனை அடையலாமென்ற விஷயத்தை எடுத்துக்காட்டும் பொருட்டே இச்சிறு நாடகம் எழுதப்பட்டது.

## நாடக பாத்திரங்கள்

| | |
|---|---|
| கருத்தசாமி மண்ட ராயர் | ஓர் குடியானவன் |
| வீரம்மாள் | கருத்தசாமியின் மனைவி |
| கோவிந்தையர் | (1) கணக்கப்பிள்ளை (2) கிராமச்சங்கக் காரியதரிசி |
| கிருஷ்ணய்யங்கார் | செட்டியார்கடை காரியஸ்தர் |
| மாணிக்கஞ் செட்டி | ரொக்கக்கடை முதலாளி |
| ராமுதேவன் | கருத்தசாமியின் சிநேகிதன் |
| பேத்துப் பிள்ளை | தானியக் கொதுவைச் சங்கக் காரியதரிசி |
| கோவாபரேட்டிவ் | இன்ஸ்பெக்டர் |

## அங்கம் ஒன்று; களம் ஒன்று

இடம் :—ஓர் நடுத்தரமான அந்தஸ்துள்ள விவசாயி வீட்டு வாசற்திண்ணை.

(சுமார் 45 வயதுள்ள கருத்தசாமி மண்டராயன் என்பவன் வயலில் வேலை செய்து களைப்புடன் வந்து உட்கார்ந்திருக்கிறான்.)

*கருத்தசாமி :—அடி ஆத்தா! ஏ வீரம்மா? என்னடா, இது, கூப்பிட கூப்பிட பதிலைக் காணோம்! புருஷன் வெளியிலே போய் கஷ்டப்பட்டுட்டு வந்தால் களப்பா இருக்கச்சே பெண்டு பிள்ளைகள் கேட்டதே கொடுக்க மாட்டாங்களா? இதென்னடா அணியாயம், ஏ ஆத்தா? ரொம்ப களப்பா இருக்குது! ஒரு கோப்பே காப்பித் தண்ணீ கொண்டாடீ!*

### பெண்சாதி வீரம்மாள் வருகிறாள்

*அடே தெய்வமே! எப்போ பார்த்தாலும் இதே தொந்தரவா போச்சு; இங்கே காப்பியுங் காணே, தண்ணியுங் காணே. நாலு நாளா காப்பியோடே கரைச்சுக் குடிக்க வெல்லக்கட்டி வாயிண்டுவா இங்கிரோன்! அதேக் காணும். என்னை மட்டும் வெறட்டரே! கட்டிக்க சீலை இல்லை. அதுவும் வாங்கிட்டுவரொல்லே. அது போகட்டும். இப்போ காப்பித் தண்ணீ இல்லை. வேணும் இன்னு கொஞ்சம்மோர் தண்ணீ வாணு கரைச்சுக் கொண்டாரேன்!*

*கருத்தசாமி :—இல்லேடி ஆத்தா! உனக்கு சேலைக்கு சொல்லிருக்கேன், நாளைக்கு சாயங் காலம் வாங்கிட்டு வாரேன்; அந்த பாழும் மருத செட்டி பழங்கணக்கைத் தீர்த்தால் தான் வேறு சாக்குத் தருவேன் என்கிறான். குருவை அறுத்தாச்சு. விலைக்குப்போட்டு 10 நாளிலே தாரேன் என்று சொல்லி இருக்கேன். ஆகட்டும் நாளைக்குவா என்றிருக்கான். வெல்லக்கட்டியும் நாளைக்கே கொண்டுவாரேன்; கோவிச்சுக் காதே!*

*வீரம் :—ஆமாம், இம்மாதிரி எவ்வளவோ தடவை சொல்லியாச்சு! நிஜமோ! பொய்யோ!*

*கருத் :—இல்லேடி இன்னு! இந்தத் தடவை சொல்லரது சத்தியம்; அதுக்கென்ன ஒரொரு சமயத்திலே ஆகட்டும் ஆகட்டுமென்று சொல்லி இருப்பேன், நாளைக்கு மட்டும் தவறாமல் வாங்கிட்டு வாரேன்! அது போகட்டும்! இந்நேரம் வெய்யிலிலே நின்றுக்கிட்டு அந்தப் பாவிப்பயல் மகன்கள் கிட்டே வேலை வாங்க வேண்டி இருந்தது. கொஞ்சம் சிரமமாய் இருக்கு! கொஞ்சம் காப்பி தண்ணீ கொண்டாயேன்!*

*வீரம் :—சரி! இவ்வளவுதூரம் கேட்கிற போது என்ன செய்கிறது! கொண்டாரேன்! நாளைக்குமட்டும் சேலையை மறக்கப்படாது! (போகிறாள்).*

*(சற்று நேரம் அவளை உற்றுப்பார்த்து)*

*அடே! நெத்தி வேர்வை நிலத்தில் விழ கஷ்டப்பட்டுட்டு வந்து குடிக்கக் காப்பி கொண்டான்னு, சேலையைக்கொண்டா, அதைக்கொண்டா, இதைக்கொண்டா இங்கிறாளே! இதாங் கலிகாலம் இங்கிராங்க. நம்ம தொல்லையும் கஷ்டமும் பெண் பிள்ளைகளுக்கு என்ன தெரியுதா! புருஷன் வீட்டிலே இருந்து முத்தம்மா நாளைக்கு வந்து விட்டால் அவள் எனக்கு சேலையைக்கொண்டா, போன வருஷம் பண்டிகையும்போது பொன் வளையல் அடிச்சுத்தாரேண்ணியே அதைக்கொண்டா என்பாள்! அந்த கொவாபொட்டிவ் சொசைட்டிக்கு மூன்று தவணை தவறிப்போச்சு! கணக்குப்பிள்ளை அய்யா நெறிக்கிறார். அந்த நாசமாப்போகிற செட்டிக்கு ஒட்டிக்கு ரெட்டி எழுதிக்கொடுத்து வாங்கி இருக்கேன்! அதுக்கு வட்டி விஷம் போலே ஏறிக்கொண்டிருக்கு. இந்த அழகிலே இவள் வேறே சேலை வேணும் இன்னு தொந்ரவுப்படுத்தாள். இனிமேல் இவள் கிட்டே தப்பிக்க முடியாது! நெல்லு விற்றுத்தாரேன் என்றாயே கொண்டாயேன் என்பாள்! இதுவரையில் வெல்லக்கட்டி கேட்டாள். இனமேல் காப்பிக்கொட்டை கொண்டா என்பாள் அந்தப் பலசரக்கு கோமுட்டிக்கும் பாக்கியைக் கொடுக்கவில்லை. ஐயோ! பாவமே! எவ்வளவு என்றுதான் இந்த குருவை நெல்லு விற்றுக் கொடுக்க முடியும்!*

*அறுவடையாகி வரப்போகிறதோ 150 அல்லது 160 கலம். அதைக் கட்டி வைத்து நல்ல விலையா இருக்கும் போது விற்றால் கலத்துக்கு 3, 3½ கிடைக்கும். அதுவரையில் காத்திருக்க முடியாதே. இப்போன்னு, ஒண்ணுக்கு பாதி விலைக்கன்றோ போட வேண்டியிருக்கும்! நான் என்ன பண்ணுவேன்! தெய்வமே! [ கைகளை இரு கன்னங்களிலும் வைத்துக்கொண்டு ஆழ்ந்த யோசனையில் உட்காருகிறான் ]*

### (கோவிந்தய்யர் வருகிறார்)

*என்ன மண்டராயரே! நேற்றைக்கே சொல்லியனுப்பினேனே! இன்னும் பணம் வரவில்லையே; நாலு நாளைக்கு முன்தான் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தரார் இடமிருந்து நிலுவை ரொம்ப பாக்கி இருக்கு, வசூல் பண்ணி அனுப்பாவிட்டால் நாங்கள் அனுப்பிய லோன் அப்ளிகேஷன்களை ரெக்கமெண்ட் செய்யமாட்டோம் என்றும், உடனே வசூலிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் கடிதம் வந்தது. நேற்று சாயந்திரம் இன்ஸ்பெக்டரும் வந்துவிட்டார்.*

*கரு:— ஐயரே! மன்னிக்கணும். உட்காருங்க நான் சொன்ன விடத்திலே இன்னும் ஒண்ணும் அகப்படலே. உமக்குத் தெரியாதா என் சமாச்சாரம்? எங்கே அய்யா ஒடிப்போச்சு எங்க பணம் எல்லாம்? இன்னும் ஒரு வாரத்திலே ஏதாவது ஏற்பாடுபண்ணி அனுப்புகிறேன் போங்கள்! (புகழ்ந்து பேசும் குரலுடன்) பயப்படாதேயுங்கள், நான் உங்களைக் கவனிச்சுக்கிறேன்! போங்கள்.*

*கோவி:—அதென்ன அப்படி சொல்கிறீர்கள். நான்தான் எப்போதும் உங்கள் மனுஷனல்*

லவா? இந்த தொல்லைக்கென்ன பண்ணாது. ரொம்ப பேரிடத்தில் பாக்கியைக் கண்டிப்பாய் கேட்க தாக்ஷண்யமாய் இருக்கு. மேலே இருந்தோ நெறிக்கிறார்கள். இன்னும் உங்களுக்கு கிஸ்திகூட கொஞ்சம் பாக்கி இருக்கிறது போல் இருக்கிறது. இங்கே வந்து நிர்தாக்ஷண்யமாக கேழ்க வேணுமே என்று இங்கே வரத்திற்கே எனக்குக் கால் எழவில்லை. இருந்தாலும் வீட்டில் வந்து இன்ஸ்பெக்டர் உட்கார்ந்து விட்டபடியாலே இந்தப் பக்கம் போரத்திலே உள்ளே நுழைந்து விட்டுப் போவோமென்று வந்தேன்.

கரு:— சரி, அதற்கென்ன? எதாவது ஏற்பாடு செய்து சீக்கிரம் கொடுத்து விடுகிறேன். அதிக சிரமம் மட்டும் இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

கோவி:— அப்போ நான் போய் வருகிறேன் (என்று இரண்டு தப்படி போவது போல் போய் திரும்பி வந்து) கொல்லையிலிருந்து பேயன்தார் ஒன்று கேட்டிருந்தேனே! இப்போது சரியான பதமாய் இருக்கும் போலிருக்கே!

கரு:—அதற்கென்ன அய்யரே; உடனே வெட்டி அனுப்பித்துவிடறேன் போங்கள். (கோவிந்தய்யர் போகிறார்)

கரு:— சரிதான் நான் நினைத்ததற்கு சரியாய் ஐயரும் வந்து விட்டார். என்ன பண்ணுவதென்று புரியவில்லையே.

[வெளியே யாரோ வந்து ஒய் மண்டுராயரே மண்டுராயரே !!]

கரு:— யாரது உள்ளே வாருங்க!

(கிருஷ்ணய்யங்கார் தனக்குத்தானே பேசிக்கொண்டு உள்ளே வருகிறார்)

மண்ணுங்கட்டி ராயரே! உன் இழவே. இழவாய்ப் போச்சு. (உரத்த குரலுடன்) நாசமாய்ப் போச்சு போங்க! உம்ம வீட்டிற்கு அலைவதே தொழிலாய்ப் போச்சு போங்கள். மிச்ச வேலை வெட்டிகளெல்லாம் பாழாய்ப்போகிறது. உமக்கு கொடுக்கிறதற்கு முந்தி முதலாளிக்கு ஒரு வார்த்தை சொல்லாமல் போனது இப்போ அனர்த்தமாய்ப் போச்சு. நம்மே ரொம்ப வொட்டுகிறார். நீரும் அதற்குத் தகுந்தாப்போலே ரொம்ப பாக்கி போட்டுட்டீர்!

கரு:—சாமி சேத்தாத்தானே உங்களே கண்டுட்டு வந்தேன். அதான் உங்களுக்கு 3 வட்டிக்கு எழுதிக்கொடுத்திருக்கேனே? சீக்கிரம் கொடுத்து ஒழிக்கணும் என்ற அக்கரை எனக்கல்லவா? ஐயா! விஷம்போலே வட்டி ஏறிக்கிட்டே இருக்குதே! இருக்க, இருக்க உங்களுக்கு லாபந்தானே! அதிருக்கட்டும், இன்னும் 10 நாள் பொறுத்து கொள்ளுங்கள். எதாவது ஆகப்பண்ணி கணக்கை தீர்த்து விடுகிறேன். கொஞ்சம் தயவு செய்யுங்கள்!

கிரு:— ஒய் மண்டுராயரே! நீர் ஏதோ தெரிந்த மனுஷன் என்று நினைத்தேன்! நீர்கூட என்ன இப்படி பேசுகிறீரே; உம்மகிட்டே 3 வட்டிக்கு எழுதி வாங்கி விட்டால் எங்களுக்கு ரொம்ப லாபமோ? உமக்கென்று நான் மனமிரங்கி தயாதாக்ஷிணத்திற்காக கொடுத்தேனே. அதை மறந்து விட்டு லாபமும் நஷ்டமுமா உம்மை பேசச்சொல்லித்து? உமக்கு நாணயம் கொடுத்த தேதியிலே எங்க முதலாளி 4, 4½ வட்டிக்கு 2, 3 குறியல்ல பார்த்து வைத்திருந்தார். உமக்கு கொடுத்ததற்கு நானல்லவா அன்று பாடுபட்டு வாங்கினேன்! லாபமாம்! நஷ்டமாம்! எதாவது கொஞ்சநஞ்சமாவது கொடுக்கிறீரா? இல்லாவிட்டால் தஸ்தாவேஜியை வக்கீல் ராமய்யரிடம் அனுப்பி விடட்டுமா?

கரு:— ஐயரே, அவ்வளவு கோவிச்சுக் கொள்ளப்படாது! என்னமோ வட்டி ரொம்ப இருக்கே என்று சொன்னேன்! ஆனால் இதெல்லாம் உங்களுக்கெல்லால் ஒரு லக்ஷயமா என்ன! நீங்கமட்டும் கொஞ்சம் பார்த்துக் கொள்ள வேண்டும்! இதோ இதை வைத்துக் கொள்ளுங்கள் (ரூ 7 கொடுக்கிறான்.) நான் சொன்ன மாதிரி அடுத்த வாரம் தாரேன்! எக்கச்சக்கமா மட்டும் ஒன்றும் விட்டு விடாதீர்கள்.

கிரு:— சரி! நீங்கள் சொல்ரத்தே என்ன செய்கிறது! ரூ. 4 கணக்கிலே வரவு வைத்து விடுகிறேன்; முதலாளிக்கு கண்ணிலே காட்டாமே உம்ம தகவலை இருத்திப்போட்டு வைத்துக்கொண்டிருக்கிறேன். 10 நாளைக்குள்ளே எப்படியாவது கணக்குத் தீர்த்துவிடும். நான்



போய் வருகிறேன் (கிருஷ்ணய்யங்கார் போகிறார்.)

கரு:— அடே தெய்வமே! இன்றைக்கு யார் முகத்தில் விழித்தேனோ தெரியவில்லை! தெய்வம் நம்மை இப்படி சோதிக்கிறதே. இந்த தொல்லை எல்லாம் எப்படியாவது கொடுத்துத் தொலைத்தால் தேவலை என்று பார்த்தேனே. இப்படி எல்லாரும் நெறிக்கித் தொலைத்தால் என்ன பண்ணுவேன்! வெளஞ்ச நெல்லை ஒன்றுக்குப் பாதி விலைக்குக் கொடுத்துவிடுவோமென்றால் மனசு வரமாட்டேன் என்கிறதே! அந்தப் படுபாவி மாணிக்கம் செட்டி ஒண்ணுக்குப்பாதி விலையல்லவோ கேட்கிறான்? என்ன பண்ணுவது? அவன் கிட்டேயே போய் சொல்லி விலையை முன்னே பின்னே தீர்த்துக் கொண்டு அகப்பட்ட பணத்தை வாங்கி விடுகிறேன். (போகிறான்)

## இரண்டாவது களம்

(மாணிக்கம் செட்டியார் கடைக்கருகாமையில் கருத்தசாமி தன் சிநேகிதன் ராமதேவனை சந்திக்கிறான்)

கரு:— ஏய்! ராமய்யா, நல்ல வேளையா வந்து சேர்ந்தாயே! கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தாப்போலாச்சு!

ராம:— ரொம்ப நாளாச்சுங்க உங்களைப் பார்த்து; வீட்டிலே அண்ணி, குழந்தைகளெல்லாம் சவுக்யமா? அங்கே வரத்திற்கே ஒழியவில்லை. என்ன விசேஷம்? என்னாலே என்ன காரியம் ஆகவேணும்? காத்துக்கொண்டிருக்கிறேன்.

கரு:—பின்னாலே எல்லாம் விபரமாய் சொல்றேன். இப்போ கொஞ்சம் பணம் முடையாய் இருக்கு. குருவை நெல்லு கொஞ்சம் போட்டால் என்ன விலைக்கு எடுத்துக்கு வாங்க என்று விசாரிப்போம் வா!

(மாணிக்கம் செட்டியார் கடைவாசற்பக்கம் வர பேசிக்கொண்டு வரும் இருவரையும் உளளே அழைத்துப் போய் செட்டியார் உட்காரவைக்கிறார்)

மாணி.— வாருங்க! உட்காருங்க! மண்டாரயரே கண்டு நாளாச்சு; என்ன சமாச்சாரம்! குருவை எல்லாம் அருப்பாச்சா? எதாவது விலைக்கு போடுவதானால் என்னை மறந்து விடாதீர்கள்! எளியவன் காத்துக்கொண்டிருக்கிறேன்.

கருத்.— செட்டியாரே! அதைப்பத்தித்தான் உங்கள் கிட்டே பேச வந்தேன். குருவை இப்போ என்ன விலையா இருக்கு? அருப்பெல்லாம் அநேகமாய் முடிந்து போச்சு. இன்னும் 4, 5, நாள் பிடிக்கும். இப்போ கொஞ்சம் பணத்துக்கு மொடையாய் இருக்கு.

மாணி.— அதற்கென்ன! உங்களுக்கு எவ்வளவு பணம் வேணுமோ வாங்கிட்டுப் போங்களேன், சௌகரியம்போல் திருப்பிக் கொடுக்கிறது. இல்லாவிட்டால், இந்த தொந்தரவெல்லாம் என்னத்திற்கு? நெல்லுதான் அநேகமாய் அறுவடையாய் விட்டது என்றீர்கள், ஏதோ முன்னே பின்னே விலையைப்போட்டுக்கொண்டு அளந்து கொள்வோம். இதுமாதிரி உங்களுக்கு முடையாய் இருக்கும்போது நம்ப லாப நஷ்டத்தை உத்தேசித்தால் சரிப்படுமோ?

கரு:— செட்டியார் கிட்டே வந்தால் நமக்கு வேண்டியபோது பணம் அகப்படும் என்பது எனக்கும் தெரியும். ஆபத்து சம்பத்துக்கு ஒரு போதும் நீங்க கைவிட மாட்டீர்களே; சரி, நெல்லு கலம் எப்படி விற்கிறது? விலைவாசி நோக்கமெல்லாம் எப்படி இருக்கு?

மாணி:— அதைப்பத்தி எல்லாம் நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்? உங்களுக்கு எப்போ அவசியமாய் வேண்டியிருக்கு என்று கேட்கிறீர்களோ அப்போ நாம் பணம் கொடுக்க வேண்டியதுதானே! சுமாராய் நீங்கள் இப்போ போடக்கூடிய நெல் 100 கலம் இருக்குமா?

கரு:—ஆமாம்.

மாணி:—உங்களுக்கு வேண்டியது ரூ. 200 க்கு மேலேயா இருக்கப்போகிறது! அதை வாங்கிக்கிட்டுப் போங்களேன்.

கரு:—என்ன கலம் ரூ. 2 வீதமா? இன்னும் இரண்டு மாதம் போனால் 3, 3½ விற்குமே!

மாணி :—ஆமாம் அய்யா! அதற்கென்ன பண்ணட்டும்? நீங்கள் சொல்லுகிறபடியே இருந்தாலும் 2, 3 மாதம் பணத்தை முடக்கி வட்டி நஷ்டமாய் வாங்கிப் போடுகிறோமல்லவா? உங்களிடமிருந்து நெல்லை வாங்கி அதை பந்தோபஸ்து பண்ணி திருட்டில்லாமல் எலி முதலியவற்றினின்றும் காப்பாற்றி வைத்திருந்தால் பின்னாலே ஒருவேளை உயர்ந்து விற்றாலும் அந்த 2½ அல்லது 3 வட்டிதானே கட்டும் ஐயா? அப்படிக்கல்லாமல் விலை குறைந்து நஷ்டம் வந்துவிட்டால், அதற்காக யாரய்யா பாத்தியப் படுகிறது? அதற்காகத்தான் இப்போது ரூ. 2 வீதம் கேட்கிறேன்.

கரு:— செட்டியாரே! உமக்கு இந்த பேச்சு இல்லாவிட்டால் பிழைக்கவே மாட்டீர். நீர் சொல்லரதைக்கேட்டால் அதுவும் ஒரு விதத்தில் நியாயமென்றுதான் படுகிறது. அதற்கென்ன பண்ணரது. உம்மகிட்டே வந்து பணம் கேட்டால் நீர் சொல்லுகிறபடி கேட்டுத்தான் ஆகவேண்டியிருக்கிறது.

ராம :—ஆமாங்கறேன்! செட்டியார் சொல்ரத்திலே ஒருபோதும் தப்பு கண்டு பிடிக்கவே முடியாது. ஆனாலும், நான் சொல்ரத்தே கேளுங்கள். அண்ணே! ராத்திரி இந்த விஷயத்தைப்பத்தி யோஜித்துக்கிட்டு காலையிலே செட்டியார் கிட்டே வருவோம்.

மாணி.— அதற்கென்ன இப்போவானாலென்ன, காலையிலானாலென்ன, நான் எப்பவும் தயாராயிருக்கிறேன், காலையிலே தான் வாங்களேன். எனக்கும் கொஞ்சம் வேலை இருக்கு; வெளியிலே போகவேண்டும்.

கரு :—ராமா—சரி, போய் வருகிறோம் செட்டியாரே! (இருவரும் பேசிக்கொண்டு வெளியே வருகிறார்கள்.)

கரு :—ஏண்டா ராமய்யா! ஒரு தகவலை ஏற்பாடு செய்தால் உடனே முடிக்காமல் என்னத்துக்கு இழுக்கடிக்கணும்? காலம்பர என்ன வந்தது? இப்போ வேலையைத் தீர்த்து பணத்தை வாங்கிக்கிட்டு போவப்படாதா?

ராமா :—அண்ணே! நான் சொன்னது விஷயம் வேறே அண்ணே. செட்டி சொல்ரது ரொம்ப குறைச்சல் விலையல்ல. ரொம்ப அநியாயம் என்று எனக்குத் தோன்றிற்று. அதுவும் தவிர நம்பதெரு வீரப்பத் தேவன் ஒரு தகவல் சொல்லிக்கிட்டு இருந்தான். ஏதோ குடியானவங்களுக்கெல்லாம், கவர்மண்டிலே தான்யத்தை ஈடாக வச்சுக்கினு, கடன் தாராங்களாம்; அங்கேயும் போய் கேட்டுக்கிட்டு, வீதி இல்லாவிட்டால் செட்டியார் கிட்டே போவோமென்று யோசித்தேன்.

கரு :—ஏண்டா! ராமய்யா, என்ன உனக்கு பயித்தியமா? கவர்மெண்டிலே கடன் தரவாவதடா? நம்ப நிலத்திலே நெல்லை கண்ணாலே காணப்போகிறோமோ? இல்லையோ? என்று யோசித்துக் கொண்டிருக்கும்போதே நம்ப கிட்டே இருந்து கிட்டிகட்டி நெறித்து, கிஸ்தி வசூல் பண்ணிக்கொண்டு போய் விடுகிறாங்களே! சரியான ஆசாமி பார்த்தாயடா நமக்கு கடன் கொடுக்க! உனக்கென்ன பயித்தியமா?

ராம ;—அண்ணே! அது என்னமோ விவரமெல்லாம் எனக்குத் தெரியாது. வீரப்பத் தேவன் தான் சொல்லிக்கிட்டு இருந்தாரு. நான் வீட்டை விட்டு கிளம்பி வரத்தேகூட அவரோடு ஒரு அய்யர் வந்தாரு. ஏதோ ஒரு இன்ஸ்பெக்டராம் அவரு. அவருங்கூட இதைப் பத்தித்தான் பேசிக்கொண்டிருந்தாங்க. எல்லாத்துக்கும் காலம்பர நீங்கள் வாங்களேன். நம்ப வீட்டுப் பக்கம் சேரிலே அவுங்களெல்லாரையும் சந்திச்சி பேசிக்கொண்டு பிரயோஜனமில்லேன்னா அபபுறம் பார்த்துக்கொள்வோம். அப்போ செட்டியார் எங்க போறாரு? நம்ப எங்கே போறோம்?

கரு :—சரி, தம்பி காலையிலே உசக வீட்டுக்கே வாரேன்! உன் ஆசையைத்தான் கெடுப்பானேன்? அவங்களையும் கண்டு கலந்துக்குவோம்; காப்பி குடிக்கவே உன் வீட்டுக்கு வந்துடரேன். போய் வாரேன் [அவர்கள் பிரிந்து வெவ்வேறு வழியாய் செல்லுகிறார்கள் ]

## மூன்றாவது களம்

**(ஒரு ஓட்டுவில்லை வீட்டின் திண்ணை; தான்யக் கோதுவைச் சங்கக் காரியதரிசி வீரப்ப தேவனும், கூட்டுறவு இலாக்கா இன்ஸ்பெக்டரும் உட்கார்ந்திருக்கிறார்கள். கருத்தசாமியும் ராமய்யாவும் உள்ளே வருகிறார்கள்.)**



வீர :—என்ன அண்ணே, மண்டாரயரே! வாங்க, வாங்க, உங்களே காணுவதே அத்திப்பூ பூத்தாப்போலே இருக்குதே, உட்காருங்க! ராமய்யா உங்களை மெள்ள இங்கே இட்டுக்கிட்டு வந்தான் போலிருக்குது!

கரு :—இல்லே தம்பி வாரமலென்ன! இப்போ எல்லாம் கண்டுமுதல் காலமல்லவா? ஒழியவே இல்லை. ஒரு விஷயமாய் ராமய்யா உன்னை கண்டுக்கணும் என்று சொன்னான். அதற்காகத்தான் வந்தேன்.

(இன்ஸ்பெக்டரை திரும்பிப் பார்த்து) சாமி தண்டம்! என் தம்பி? ஐயரைத் தெரியவில்லையே! ஏதாவது புதிசா வரிவசூலிக்க வந்திருக்காங்களோ?

இன்ஸ் ;—(சிரித்துக்கொண்டு) இல்லை ஐயா! பயப்படாதேயுங்கள் வரி ஒண்ணும் வாங்க நான் வரவில்லை. கொடுக்கவேணுமே என்று பயப்படாமல் சுலபமாய் வரி யெல்லாம் கொடுக்க வழி சொல்லித் தருவதற்காகத்தான் வந்திருக்கிறேன்.

வீர ;—ஐயாா? அவர்தான் நம்ப ஊரிலேயே இருக்கல்லவா கோவாபரேட்டிவ் சொசைடி, அதுக்கு கவர்ன்மெண்டிலே ஏற்படுத்தி இருக்கும் இன்ஸ்பெக்டர்; இதுமாதிரி சொசைடி எல்லாம் ஏற்படுத்தி ஒழுங்காய் சரிவர நடந்து வருகிறதா என்று பார்த்து வரணும் இவங்க.

ராம ;—வீரப்பா! நம்ப மண்டாரய அண்ணனுக்கு ரொம்ப அவசரமாய் கொஞ்சம் தொகை வேண்டியிருக்குதாம். ரொம்ப நிர்பந்தத்திலே மாட்டிக்கிட்டுருக்காங்கள். நேத்திக்கே சாயங்காலம் நான் போரத்தே மாணிக்கஞ் செட்டி கடையிலே நாணயத்துக்கு பேசிக்கிட்டு இருந்தாங்க. அந்த பம்பாவி வழக்கம் போலே கலத்துக்கு ரூ. 2 மேனிக்கு விலை பேசிக்கின்னு கண்டுமுதல் ஆகிற நெல்கலம் சுமார் 100-க்கு ரூ. 200 தாரேன்னு சொன்னான். உடனே நீ சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. நான் கிட்டே இருந்து கிட்டு, எத்தாய் நாளைக்கு வாரோமென்று சொல்லிவிட்டு வந்திட்டேன். நீ சொன்னமாதிரி, இங்கே புது சொசைடிலே கொடுப்பாங்க பணம், இந்த அகாத விலைக்கு போடவேண்டாம் என்று சொன்னேன். அவருக்கு நம்பிக்கைப்படல்லே அப்பா, நீ அவரு கிட்டே சமாசாரத்தை சொல்லி ஏதாவது ஏற்பாடு பண்ணிக்கோ!

வீர :—அதற்கென்ன? எப்போவும் தயாராக இருக்கிறேன். மண்டாரயண்ணே! உங்களுக்கு இப்போ எவ்வளவு கண்டு முதலாகுங்க?

கரு :—என்னமோ சுமார் 100 கலம் கிடைக்குமா என்று கேட்டாரு செட்டியாரு! கிடைக்கலாமென்று சொன்னேன். எவ்வளவு காண்றதோ என்னமோ; [ராமய்யா வீரப்பன் இருவரையும் நோக்கி அவர்கள் கருத்தை விசாரிப்பதுபோல் பார்க்கிறான்.]

வீர ;—அண்ணே! அதெல்லாம் பயப்பட வேண்டாம். இன்ஸ்பெக்டரய்யா வந்திருக்காங்களே எங்கே கோவாப்ரேடிவ் சொசைடி பாக்கிக்காக உங்க நெல்லை எடுத்துக்குவாங்களோ என்று யோசிக்காதேங்க. இப்போ எவ்வளவு கண்டு முதலாகும் என்று சொன்னால் அதற்கு தகுந்தாபோலே உனக்கு பணம் தருவோம். நாளைக்கே நெல்லை கொண்டாந்து நம்ப களஞ்சியத்திலே போட்டு வைக்கணும். உங்களுக்கு தகுந்த விலையாய் வந்து வித்து விடலாமென்று எப்போ தோணுதோ போய்விடலாம். அந்த தொகையிலிருந்து நீ இப்போ வாங்கிக்கிட்டு போர கடனையும் வட்டியையும் கொடுத்துடணும்.

கரு :—சரிதான்! அப்படியன்னா ரொம்ப சௌகரியந்தான். [வீரப்பனை நோக்கித் தனியாய்] அடே இதென்னடா வம்பிலே இழுத்து விட்டிட்டியே, நெல்லை இங்கே கொண்ணாந்து போட்டுட்டா அப்புறம் நம்ப கண்ணிலே அதைக் காட்டு வாங்க என்றது என்ன நிச்சயம்? அவங்கள் எடுத்து வித்து விட்டு பின்னாலே கோவாபரேட்டிவுக்கு கடன் பாக்கி, கிஸ்தி பாக்கி என்று சொல்லி எடுத்துக்கட்டாங் கன்னா நாம்ப என்ன பண்ணரது! அப்ப யாரைக் கேட்கிறது?

வீர :—அண்ணே அதைப்பற்றி கொஞ்சம்கூட யோசிக்கவேண்டாம். மணி மணியாய் உங்க நெல்லை தனியாய் மூட்டைகட்டி முத்திரை போட்டு வைத்திருக்கோம். அதெல்லாம் சரியாய் கணக்கு வைத்திருக்கிறோம். நீ எப்போது வேணுமென்கிறாயோ அப்போ திருப்பி எடுத்துக்கிடலாம்.

JL
148727

கரு:—சரி, தம்பி இப்போ எனக்கு சுமார் 100 கலம் கண்டு முதலாகிறது. எவ்வளவு பணம் கடன் கொடுப்பீங்க?

வீர:—இப்போ கலம் வெளி யூரிலே எல்லாம் ரூ. 2-12-0 அல்லது ரூ. 3 விற்கிறது. இன்னும் 5, 6 மாதத்திலே சுமார் 3½ ரூபாய்க்குக் குறையாது. 100 கலத்துக்கு ரூ. 2½ வீதம் ரூ. 250 உம்முடைய தான்யத்தை கொதுவை வைத்து கடனாய் கொடுக்கலாம். அதற்கு வட்டி மாதத்திற்கு சுமார் 100-க்கு 10 அணா ஆகலாம்.

கரு:—(ஆச்சயத்துடன்) என்னது? செட்டியாரு ரூ. 200 தான் தருவேன் என்று சொன்னாரு. அதுவும் கிரமமாய் போட்டுக்கணும் என்றார். நீங்க ரூ. 250 தாரேன், கடன்தான், பின்னாலே அடகு மீட்கிறமாதிரி பணத்தை கொடுத்துவிட்டு நெல்லையும் எடுத்துக்கிட்டு போகலாம் என்கிறீர்களே!

இன்ஸ்:—ஐயா இன்னொரு விஷயமும் உண்டு. நீங்கள் ஏற்கனவே யோசித்திருந்தமாதிரி அந்த நெல் வியாபாரியிடம் நெல்லைப்போட்டால் அவன் உங்களுக்கு ரூ 200 மட்டும் தான் கொடுப்பான். அதோடுகூட, நெல் முழுதும் அவனுக்கே சொந்தமாய்விடும். நல்ல விலையாய் விற்கும் போது ரூ 3, 3½ க்கு விற்று விடுவான். அப்படி விற்கிறதில் வருகிற லாபத்தில் தம்படிகூட உங்களுக்குக் கொடுக்கமாட்டான். நம்ப கோவாபரேட்டிவ் கொதுவைச் சங்கத்திலே இப்போ உங்களுக்கு வேண்டியபடி அந்த செட்டி தருவதற்கு மேலே ரூ. 50 கூடவே கிடைக்கும். உம்முடைய வீட்டுச்செலவுக்கு ரூ. 250 அகப்படும். நெல்லும் எப்போவும் உங்களுக்குச் சொந்தமாகவே இருக்கும். பின்னாலே நல்ல விலை வருகிறபோது சம்பாதிக்கக்கூடிய லாபத்தையும் செட்டி அடைவதற்கு பதிலாய் நீரே அடையலாம். அப்படி கலம் 3, 3½ க்கு விற்கிறதிலே இருந்து, வருகிறது கையிலிருந்து இப்போ வாங்கிற கடனையும் கொடுத்துவிட்டு பாக்கி கொடுக்க வேண்டிய கூட்டுறவு சபை பாக்கி பத்துவரவு கணக்கு எல்லாத்தையும் கொடுத்துவிட்டு மிதுவதை வீட்டுச்சிலவுக்கும் மிச்சம் பிடித்துக் கொள்ளலாம். அதாவது நெல் வியாபாரி கிட்டே போகாமல் இங்கு ஈடு வைத்து கடன் வாங்குவதில் உமக்கு ஒரு கலத்திற்கு சுமார் 1½ வீதம் லாபம் வரக்கூடியதாய் இருக்கிறது.

கரு:—சாமி, இவ்வளவு தூரம் எங்களுக்கு ஒத்தாசை செய்ய கவர்மெண்ட் ஏற்பாடுபண்ணி இருக்காங்க என்னு தெரியாது சாமி! ஆனுக்கெ கடலைக் காலத்திலே, இங்கே ஒங்ககிட்டே கடலையே கட்டி வெச்சிட்டு பணம் வாங்கிக்கலாமோ. கடலை கொட்டைக் கம்பெனியிலே, புழுதிமயமாய் வட்டி போட்டு எழுதிக்கட்டு பணம் கொடுக்கிறாங்கிளே கணக்கு பார்த்தால் கலத்திற்கு 1ரூ, 1½ ரூ நஷ்டம் வருதே ஐயா?

இன்ஸ்:—அதெதற்கென்ன அப்பா! எந்த தான்யம் கொண்டாந்தாலும் வாங்கி வைத்துக்கொண்டு ஈட்டின்பேரில் பணம் தருகிறோம்.

கரு:—ஐயா சாமி, நான் ஒண்ணும் விவகாரப் பழக்கம் இல்லாதவன். இந்த தகவல் யெல்லாம் தெரியவே தெரியாது. என்னைப்போல இருப்பவங்க ரொம்பபேரு இருப்பாங்க. அவர்களுக்கு கவர்மென்டிலே இவ்வளவு தூரம் ஏழைகளுக்கு ஒத்தாசை செய்து பணங்கொடுத்து உதவ தயாராயிருக்காங்கோ என்னு தெரிவிச்சாக்க ரொம்ப நல்லதாய் இருக்கும்.

வீர:—அண்ணே! நீங்க சொல்லுறது ரொம்ப சரி. நம் ஜனங்களுக்கு என்னமோ வரிவசூல் பண்ணற கவர்மெண்டா; நமக்கு உதவி செய்யவாவது என்று ஒரு அவநம்பிக்கையான எண்ணம் உண்டாயிருக்கிறது. அதை தவறு என்று எடுத்துக் காட்டவேணும். இன்னொன்று; கவர்ன்மெண்ட் இந்த விஷயத்தில் நமக்குச் செய்யும் உதவி மேன் பார்வையைத்தவிர வேறொன்றுமில்லை. பாக்கி விஷயங்களிலெல்லாம் நம்ப எல்லா கூட்டங்களின்படி மானேஜ்மெண்டு முழுக்க நம்ப கைகுள்ளேதானே ஒழிய வேறே இல்லை. இந்த விஷயங்களை எல்லாம் நம்பட்டவர்களுக்கு எடுத்துக்காட்டி இந்த கூட்டுறவு முயற்சி அதாவது கோவாப்ரேடிவ் என்னும் இயக்கத்தால் உண்டாகிற நன்மைகளை எடுத்துக் காட்டி எல்லோரும் அதன் பிரயோஜனங்களை அடையும் பொருட்டு நாங்கள் ஒவ்வொரு கிராமத்திலும் கூட்டம்போட்டு சொசைடிகள் உண்டாக்க ஏற்பாடு செய்யப்போகிறோம். நீங்க வருவதற்கு முன்னும் இன்ஸ்பெக்டர் ஐயா



விடத்திலும் இதைப் பத்தித்தான் பேசிக்கொண்டிருந்தேன்.

கரு;—சாமி, நீங்களும் உங்களுடைய அதிகாரிகளும் எங்களுக்கு இம்மாதிரி செய்யா ஒத்தாசைக்குக் கணக்கிலே! நீங்களெல்லாம் சாமி புண்ணியத்திலே ரொம்ப நாள் வாழவேணும். வாரேங்க சாமி!

## அங்கம் இரண்டு; களம் ஒன்று.

**[பெரிய சாலைவுக்குள் ஒரு மாளிகையின் அருகே ஓர் வயது முதிர்ந்த அய்யங்கார் யோசனை பண்ணிக்கொண்டே அங்கும் இங்கும் நடமாடினவராய் வாசற்படியண்டை காத்துக் கொண்டிருக்கிறார். மற்றொருவர் கொஞ்ச தூரத்துக்கப்பால் காணப்படுகிறார்]**

அய்யங்கார்:— (தனித்துப் பேசுகிறார்) இவன் எங்கே வந்து சேர்ந்தான்? நமக்குப் போட்டியாக வருகிறானோ என்ன?

(உரக்க) ஆரு பிள்ளைவாளா? வாணம். எங்கே இவ்வளவு தூரம்? வீட்டில் யெல்லோரும் சௌக்கியந்தானே?

பிள்ளை:— சௌக்கியத்திற்கு என்ன குறை? தாங்கள் இங்கு வந்தது என்ன விஷயமோ?

அய்யங்:— ஒன்றும் விசேஷமில்லை! இங்கு ஒரு மனுஷ்யாளைப் பார்த்துவிட்டு போகலாமென்று வந்தேன்—செட்டியார் வாள் சௌக்கியந்தானே?

பிள்ளை:— (பரிகாசக் குரலுடன்) ஆகா—ஆ ஆ ரொம்ப சவுக்கம்.

அய்யங்:— என்ன ஒரு மாதிரியாய் பேசுகிறீரே! விசேஷமெதுவுமுண்டோ?

பிள்ளை:— விசேஷமென்ன! ஊருக்குக்கேடு முளைத்ததுதான். கோவாபரேட்டிவ் சொசைட்டியாமொன்று வந்து செட்டியைக் கெடுத்துவிட்டதுதான் பெரிய விசேஷம். உம்—செட்டியார் என்ன செய்வார் பாவம்! தான்யம் விற்க யாராவது அவரைத் தேடி வந்தாலல்லவோ, சுரா வண்டு ரத்தத்தை உருஞ்சுவதுபோல் அவரை ஒழித்து விடுவார். அது எக்கேடு கெட்டாலென்ன. என் பாடல்லவா தாளத்தில் வந்துவிட்டது.

அய்யங்:— (தனக்குள்) எது நம்மைப்பிடித்த சனி இவனையும் பிடித்தால் போலிருக்கிறது. நான்தான் முதலாளி கடையில் வேலையில்லை என்று வெளியேறினால் இவன் நமக்கு முந்தி வந்திருக்கிறானே! பேஷ்! நல்ல கோவாபரேட்டிவ் அய்யா இது. இது பெருங்கூத்தாயிருக்கிறதே. ஊரில் ஒரு வர்த்தகன், ஒரு சவகாரியை தலைக்களப்ப வொட்டாமல் அடிக்கிறதே! இது இன்னும் என்னென்னதான் செய்ய வல்லதோ தெரியவில்லையே!

[சுத்தமாய் உடுப்புப் போட்டுக்கொண்டு கருத்தசாமி மண்டராயர் உட்புறத்திலிருந்து வெளிப்படுகிறார்.]

மண்டராயர் வாளா!

மண்ட:—நமஸ்காரம், சுவாமி எங்கே புறப்பட்டது?

அய்யங்:—எல்லாம் உங்கள் தயவுக்குத்தான் (அடங்கின குரலுடன்) தான்யக் கொதுவை சங்கத்தில் ஏதோ குமாஸ்தா நியமிக்கப்போவதாகக் கேள்வி—அதற்காகத்தான் பார்த்துவிட்டு போகலாமென்று புறப்பட்டேன்—பிரசிடெண்டாமே யாரு?

பிள்ளை;—(தனக்குள்) அடே இந்தப் பாவி அய்யன் எங்கே நமக்குப் போட்டியாய் வந்தான்.

கரு;— சுவாமி நல்லது, நான் தனியே சொல்வதென்ன இருக்கிறது? மீட்டிங்கில் அந்த பிரஸ்தாபம் வந்தால் பார்க்கலாம். அதற்கென்ன—ஆனால் உங்கள் போன்றவர்களுக்கு இந்த வேலைகள் பிடிக்காதே! பரம ஏழை இராக் குடிக்கக் கஞ்சி இல்லாதவன் முதல் ஜமீன்தார் வரை சம அந்தஸ்தாய் பழக வேண்டிய இடமாச்சுதே. முதலாளி பேர் வைத்துக்கொண்டு அதிகாரம் செய்து விரட்ட வாய்க்காதே.

பிள்ளை;—மண்டராயர்வாள் நன்றாய்ச்சொன்னீர்கள்! அந்தக் காலத்தில் அய்யர் அவர்கள் சற்று முறுக்குத்தான்.

அய்யங்;—ஆமாமா! கேழ்ப்பானே! வாய்ப் பேசாமல் படிக்குப்பாதியாய் குடியானவனிடத்தில் வாங்கி தம்படிக்கும் தம்படி லாபம் வைத்து வித்து ஈரத்துணியைப்போட்டு கழுத்தறுப்பதில் வர்த்தகர் சாமர்த்தியம் சாவகாரிக்கு வருமா ஆ!

*கரு* :—(அடங்கின குரலுடன்) பழைய அய்யரும் பிள்ளையுமாக இல்லையே இவர்கள் ; ஆகா! ஐக்கிய இயக்கத்தின் மகிமையே மகிமை. (உரத்த குரலுடன்) எல்லாம் துப்பாக்கியும் பீரங்கியும் தான். ஒன்றுக்கொன்று சளையில்லை. நீங்கள் ஏன் வீண் விவாதம் செய்து கொள்ள வேண்டும். உங்கள் முதலாளிகளை விட கல்நெஞ்சர்களையும் இளக்க வல்லது ஐக்கிய இயக்கம்—சரி; சற்று ஜோலி இருக்கிறது. போய் வருகிறேன். உத்திரவு கொடுங்கள்.

**(கருத்தசாமி மண்டராயரும் பெத்துப்பிள்ளையும் வெவ்வேறு பக்கமாய் போகிறார்கள்)**

*அய்யங்கார்* ;—அடேயப்பா! இதென்ன ஆச்சரியம்! இந்த மண்டராயன் எப்படிக் கிடந்தவன். நாலு பேருக்கு மத்தியில் பேசக்கூட இவனுக்கு நாவெழாது. எப்போதும் பணத் தட்டு. முகத்தில் விசனக்குறி தவிர வேறு பார்க்க முடியாது. பாக்கிக்கு சால் ஜாப்பு சொல்லக்கூடத் தெரியாது. அடித்தாலும் அழத்தெரியாதவன் போலிருந்தான். இந்த கோவாபரேட்டிவில் சேர்ந்தாலும் சேர்ந்தான், எல்லாம் ஒரு ஐந்தாறு வருஷங்களுக்குள்ளே இன்னவிதத்தில்தான் என்றில்லை முன்னுக்கு வந்து விட்டான்! ஐசுவரியமும், படிப்பும், நாகரீகமும்தான் விருத்தியாயின; அத்துடன் பெருந்தன்மையும், நிதானமும், அடக்கமும் கூட வந்திருக்கின்றனவே இவனுக்கு. அதல்லா ஆச்சரியம்? இந்த கோவாபரேட்டிவில் என்னதான் குணமிருக்கிறதென்று இதுவரை கவனியாமல் மோசம் போய் விட்டேன். இனியாவது இதில் கவனம் செலுத்த வேண்டும்.

## களம் இரண்டு

**[பண்டக் கோதுமையின் பேரில் கடன் கொடுத்து விற்பனைக்கு உதவி செய்யும் சபையின் கட்டிடத்திற்குள் அச்சபையின் மகா சபைக்கூட்டம் நடக்கிறது. கருத்தசாமி மண்டராயர் தலைவராக வீற்றிருக்கிறார். அந்தச் சபையின் காரியதரிசியாகிய கிருஷ்ணய்யங்காரும் மானேஜராகிய பெத்துப்பிள்ளையும் கூட இருக்கிறார்கள்.]**

*தலைவர்* ;—சகோதரர்களே! இன்று கூட்டப்பட்டிருக்கும் விசேஷ மகா சபைமுன்பாக வரப்போகும் விஷயங்கள் ஏற்கனவே உங்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளின் அவசியத்தைப்பற்றி உங்களுக்கு நன்றாய்த் தெரியும். ஆகையால் காலதாமதமின்றி யில் அந்தப் பிரேரணைகளைக் கொண்டு வருவதாயிருக்கும் நமது காரியதரிசி கிருஷ்ணய்யங்கார் அவர்களைத் தீர்மான விஷயமாய் பேசும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

*அய்யங்கார்* :—சகோதரர்களே! நான் இன்று தங்கள் முன்பாகக் கொண்டு வரும் தீர்மானங்கள் இரண்டு. அதாவது :—

(1) "இந்த தானியக் கொதுவை சங்கத்தின் கிளைகள் இந்த தாலுக்காவில் இன்னும் இரண்டு இடங்களில் ஸ்தாபிக்க வேண்டும்"

(2) "இந்த ஜில்லாவில் ஆங்காங்கு ஒவ்வொரு முக்கிய வர்த்தக ஸ்தலங்களிலும் தானியக் கொதுவைச் சங்கம் ஸ்தாபித்து நடத்த வேண்டியதின் அவசியத்தைப்பற்றி கிராமம் தோறும் பிரசார வேலை செய்யும் பொருட்டு தக்க படிப்பும், பயிற்சியும், யோக்யதையும், தியாக புத்தியும் வாய்ந்த ஒருவரை தஞ்சையில் நடந்து வரும் ஹீட் கோவாபரேட்டிவ் காலேஜிலிருந்து தருவித்து 4 மாத காலம் பிரசார வேலை நடத்தி வைக்க வேண்டுமென்றும் அவரது சம்பளம், படி முதலிய செலவுகளை நமது பொது நல பண்டில் சேர்ந்திருக்கும். ரூ. 1000த்திலிருந்து கொடுக்கலாமென்றும் இக்கூட்டம் அபிப்ராயப்படுகிறது."

இது சமயம் மேற்கண்ட தீர்மானங்களைக் குறித்து இரண்டொரு வார்த்தைகள் கூறுவது உசிதமென நினைக்கிறேன். ஏழைகள் விவசாயச் செலவுக்கு சாவகாரியிடம் கடன் வாங்கி முழுகிப்போகாமலும், விளைந்த தானியத்தை வர்த்தகரிடம் களத்தில் அழிந்த விலைக்குப் போட்டு நஷ்டமடையாமலும், நெல் மணிலா இவைகளை மிஷினில் குத்தி விற்பனைக்குத் தயார் செய்து எட்டிய தொலை வியாபாரிகளுக்கு விற்பதினால் அதிக விலை கிடைக்கும்படிக்கும் பாதுகாப்பதில் நமது சங்கம் எவ்வளவு உபகாரம் செய்து வருகிறதென்பது உங்களுக்கு அனுபோகத்தில் தெரிந்த விஷயம். நமது சங்கம் சுமார் 10 வருஷத்துக்கு முன் மிகச்சொற்ப



# கிராமங்களின் தற்கால நிலைமை

**[சுமார் ஏழு வருடங்களுக்கு முன் இந்நாட்டிற்கு விஜயஞ்செய்த விவசாயக் கமிஷன் நாடு பூராவும் சுற்றுப்பிரயாணம் செய்து, நாட்டின் விவசாய நிலையைப்பற்றி தாம் நேரில் கண்டதையும், விசாரித்தறிந்ததையும், தமது அபிப்ராயத்தையும் விபரமான யர்தாஸ்தாக வெளியிட்டிருக்கின்றனர். நமது சஞ்சிகையில் வெளியிடப்படும் பாகம் 14-வது அதிகாரம், கிராமம் என்பதின் சாராம்சம்]**

கிராம வாழ்க்கையை நாம் பொதுவாக இரண்டாகப் பிரிக்கலாம். முதன் முதலாக, கிராமச் சுகாதார விஷயமாய் அரசாங்கத்தார் செய்ய வேண்டிய கடமைகளையும், சுகாதார முறைகளைக் கண்டுபிடித்து அவற்றைப்பிரயோகித்து அமுலுக்குக் கொண்டு வருவதைப்பற்றியும் நாம் விவரிப்போம். பின்பு, அரசாங்கத்தார் கையாளும் முறைகளைப் பொது ஜனங்கள் கைப்பற்றி இன்னும் விசேஷமாகக் கிராம வாழ்க்கையை மேம்படுத்தி, கிராமத்தைச் செழிக்கச் செய்வதெப்படி என்பதையும் கவனிப்போம் தற்காலத்தில் அரசாங்கத்தாராலும், பொது ஜனங்களாலும் கிராமப் பொது நலத்திற்கு ஏராளமான நன்மை செய்யப்பட்டு வருகிறது. கிராமத்தின் பொருளாதார நிலைமையும் கிராமப் பொது நல அபிவிருத்திக்கு அனுகூலமாகவே இருக்கிறது. ஆனால் இவ்வபிவிருத்திப் பெரும்பாலும் கிராம ஜனங்களைப் பொறுத்ததாகவே இருக்கிறது.

### கிராம வாழ்க்கையின் பொதுத்தோற்றங்கள

விசாலமானதும் விஸ்தீரணமுள்ளதுமான பரந்த இவ்விந்திய நாட்டிலே ஆங்காங்கு

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

மாய் ஆரம்பித்து படிப்படியாய் விருத்தி அடைந்து இப்பொழுது 500 அங்கத்தினர்களும் வருஷம் ஒன்றுக்கு சுமார் 4 லெக்ஷம் ரூபாய் பெரும்படியான நெல், மணிலா, பஞ்சு முதலிய விளைபொருள்கள் அடமானத்தின்பேரில் கடன் கொடுத்துதவும் ஸ்திதியில் இருக்கிறது. ஆதியில் சர்க்கார் கடன் உதவியால் நான்கு தனித் தனி கிடங்கு கட்டியிருக்கிறோம். சர்க்கார் கடனும் பூரா தீர்த்தாய் விட்டது. இன்னும் விருத்தி செய்ய முயற்சி எடுத்துக்கொண்டே வருகிறோம். இதெல்லாம் நல்ல முன்னேற்றந்தான். ஆனால் இந்த தாலுக்காவில் 10ல் ஒரு பாகம் மாசூல்கூட நமது சங்கத்தின் மூலமாய் வந்து போவதாய் சொல்ல முடியாது. நாம் அனுபோகத்தில் கைகண்ட நன்மையை இத்தாலுக்காவில் மற்றெல்லோருக்கும் கிட்டும்படி செய்ய குறைந்தது இரண்டு கிளைகள் மிக அவசியம். எந்தந்த இடங்களில் வைக்கலாமென்றும் ஆங்காங்கு எவ்வளவு தொழில் நடக்குமென்றும் செலவு எவ்வளவு ஆகுமென்றும் திட்டம் விபரமாய் நமது மானேஜர் பெத்துப்பிள்ளை அவர்கள் நுட்பமாய்த் தயாரித்துப் பார்த்து அவசியம் கட்டும், நடத்தலாமென்று அபிப்ராயமும் கொடுத்திருக்கிறார்.

மேலும், "உண்டிக்கழகு விருந்தோடுண்ணல்" என்று சொன்னபடி இந்தத் தானியக் கொதுவைச் சங்கத்தின் நன்மையை நமது தாலுக்கா விவசாயிகள் மட்டும் அடைவது போதுமா? நமது ஜில்லா பூராவும் விவசாயிகள் முன்னேற்றமடையச் செய்வது நமது கடமையல்லவா. இப்பிரசார வேலை செய்ய கோவாபரேட்டிவ் காலேஜில் தேர்ந்தவர் தவிர வேறு யார்தான் லாயக்குள்ளவர்கள்? இவ்வித பிரசாரத்தில் செலவிடுவதைவிட நமது சங்கப் பொதுநல பண்டு பணத்திற்குத்தான் வேறு என்ன நல்ல விநியோகம் ஏற்படக்கூடும்? ஐக்கிய இயக்கத்தின் மகிமையைக் காட்ட கல்நெஞ்சத்தார்க்கும் துணிவு காட்டிய என் போன்றவர் மனதைக்கூட திருப்பச் சக்தியுண்டென்றால் அவ்வியக்கத்தின் பெருமைக்கு வேறென்னதான் அத்தாக்ஷி வேண்டும்? ஆகையால் மகா சபையார் எல்லோரும் ஏக மனதாய் என் இரண்டு தீர்மானங்களையும் நிறைவேற்ற வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எல்லோரும் :—அப்படியே (கைகொட்டி ஆரவாரிக்கின்றனர்.)

காணப்படும் வித்தியாசங்களையும், இயற்கை விநோதங்களையும் கண்டு திகைக்காதவர்கள் கிடையாது. அதன் பல்வேறு பாகங்களில் பல்வகை சீதோஷ்ண நிலைமையும், விதம் விதமான சாகுபடி முறைகளும் காணப்படுகின்றன. அதன் இயற்கை அமைப்பில் உன்னத மலைகளும், ஆழ்ந்த பள்ளத்தாக்குகளும், பரந்த பீடபூமிகளும், நிலவளம் பொருந்திய விசாலமான சமவெளிகளும் காணப்படுகின்றன. அதன் ஜனங்கள் பலவகைப்பட்டவர்கள். வெவ்வேறான நிலைமையில் சமூக அபிவிருத்தியைப் பார்க்கலாம். இந்த நிலைமையிலே, விவசாயியைப்பற்றியும் அவனது சமூக அமைப்பைப்பற்றியும் பொதுவான தத்துவங்களை எடுத்துரைப்பது எறக்குறைய சிரமசாத்தியமான காரியம் என்றே தோன்றும். ஆனால் இந்தியா முழுவதுக்கும் பொதுவான சில பொருளாதார அம்சங்களும் சமூகச் சின்னங்களும் இருக்கின்றன. பெரிய பட்டணங்கள் இந்தியாவில் சொற்பம். விவசாயம்தான் பெரும்பாலும் ஜனங்களின் தொழிலாயிருக்கிறது. சிறிய விஸ்தீரணமுள்ள சில ஏக்கர் உள்ள பூமிகளைத்தான், சாதாரணமாய் விவசாயிகள் உடைத்தாயிருக்கிறார்கள். விவசாயியின் பொருளாதார நிலைமை மிகவும் கவலைக்கிடமாய்த்தானிருக்கிறது. கிராமங்களில் மத்திய வகுப்பு என்பதே கிடையாது. மடமையே எங்கும் நிறைந்திருக்கிறது. கிராம வாசிகள் ஜாதி வித்தியாசத்தினாலும் அதனால் ஏற்படும் அந்தஸ்தினாலுமே கட்டப்பட்டிருக்கின்றனர்.

சமூகப் பொருளாதார அபிவிருத்தியானது புதிய எண்ணங்களின் வளர்ச்சியாலும், வெளியுலகத்துச் சம்பந்தத்தால் ஏற்படும் ஆசையாலுமே அப்புதிய எண்ணங்களை அனுபவத்தில் கொண்டு வருவதற்கேற்ற வசதிகளைப் பொருத்ததாயிருக்கிறது.

இதுவரையில் இந்திய விவசாயிகளின் தேவை மிகவும் சொற்பமாகவே இருந்தன. இந்நாள் வரையில் கிராமத்தாருக்கு வேண்டிய பல்வகைப் பொருள்களும் கிராமத்திலேயே கிடைத்து வந்தன. கிராமத்தாருக்கும் வெளியுலகத்திலுள்ளவர்களுக்கும் யாதொரு விதமான சம்பந்தமும் இதுவரை ஏற்படவே கிடையாது. சாதாரணமாகக் குடியானவன் தனக்கருகாமையிலிருக்கும் பட்டணங்களிலிருந்தும், ஆலைத்தொழிலாளர்கள் நடத்தும் வாழ்க்கையினின்றும் கிடைக்கும் புதிய உணர்ச்சிகளால் பயனெய்துகிறானென்பது சரித்திராசிரியர்களின் துணிபு. ஆனால் இந்தியக் குடியானவன் பட்டணங்களையாவது, ஆலைத்தொழிலாளர்களின் வாழ்க்கையையாவது கண்டவனல்ல. இந்தியக்குடியானவன் வெறும் தற்குறி; அவனுக்கு எழுதப் படிக்கத் தெரியாது. கிராமத்தில் அவனுக்கு உதவி செய்பவர்கள் எவருமில்லை. பெரும்பாலான குடியானவர்கள் இன்றைக்கும் இவற்றை வேண்டுவதில்லை. பரம்பரையாக அவனுக்குத் தற்காலத்துச் சௌகரியங்களான சுகாதாரம், குடிக்க நல்ல தண்ணீர், கைதேர்ந்த வைத்திய உதவி, இவையொன்றுங் கிடையாது. இதற்குக் காரணம் அவற்றின் மகிமை அவனுக்குத் தெரியாமலிருப்பதுதான். அடிக்கடி கிராமங்களில் காலரா, மலேரியா, வியாதிகள் வந்தால் குடியானவன் அவற்றைத்தடுக்க ஒன்றும் செய்வதில்லை. அதற்குக் காரணம் சுகாதாரம், சுத்தமான குடிக்கும் தண்ணீர், வைத்திய உதவி போன்ற சௌகரியங்கள் இல்லாமைதான் என்பது அக்குடியானவனுக்குத் தெரியாது. இம்மாதிரி அடிக்கடி கொள்ளை நோய்கள் ஊரில் வருவது இயற்கையாகவே ஏற்படுகிறது என்பது அவனது அபிப்ராயம்.

இவை அவனது குறைகளாகும். ஆனால், அவனிடம் நல்ல குணங்கள் இல்லாமலில்லை. அனாதிகாலமாக அவனும், அவனைச்சார்ந்தோரும் "தன்கையே தனக்குதவி" என்ற பழமொழியைக் கைப்பிடித்து வாழ்ந்து வருகின்றனர். கிராமத்தாருக்கு வேண்டிய உணவுப்பொருள்கள் யாவும் இக்காலத்திலுங்கூட கிராமங்களிலேதான் பயிராக்கப்படுகிறது. சில வருடங்களுக்கு முன்பாக பயிர் நன்றாக விளையாத காலத்தில் கிராமங்களில் பஞ்சம் உண்டாயது. அதனால் கிராமங்களே அழிந்துபோனதுமுண்டு. ஆடம்பரமற்ற விவசாய வாழ்வுக்கு வேண்டிய எல்லாத் தொழிலாளர்களையும், அதாவது கருமான், தச்சன், நெசவுக்காரன், குயவன், தோல் சாமான்கள் செய்யும் சக்கிலி போன்றவர்களை எல்லாம் கிராமம் காப்பாற்றி வந்தது. இவ்வழக்கம் சில கிராமங்களில் இன்றைக்கும் இருந்து வருகிறது.



பயிர் செய்வதற்கு வேண்டிய தட்டுமுட்டுச் செலவிற்குப் பணம் கொடுக்கவும், தானியங்களை விற்றுப் பணமாக்கிக் கொடுக்கவும், தற்காலத்தில் கிராமங்களில் லேவாதேவி செய்யும் சாவுகார்கள் இருக்கின்றனர். ஆனால் பெரும்பாலான கிராமங்களில் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகக் குடியானவர்களுக்கு எளிய வட்டிக்குப் பணம் கிடைக்கும்படி மற்றொரு சௌகரியத்தை அரசாங்கத்தார் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். இப் புது முறையால் கிராமத்தாருக்கும் அநேக வழிகளில் நன்மை ஏற்பட்டு வருகிறது என்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை.

கிராம விஷயங்கள் யாவும் கிராமத்தாராலேயே கவனிக்கப்பட்டு வருகிறது. கிராமத் தலைவருக்குள்ள அதிகாரமும், அவர்களைத் தேர்ந்தெடுக்கும் விதமும், பல வகுப்பாருக்குள் மாறுபட்டதாயிருக்கிறது. ஆனால் கிராமத் தலைவன் என்பது எல்லா இந்தியக் கிராமங்களுக்கும் உள்ள ஒரு முக்கிய அம்சமாகும். தகப்பனுக்குப் பின் மகன் கிராமத் தலைவன் பதவியை அடைகிறான் என்றாலும், அவன் தன் இஷ்டம்போல் காரியங்களைச் செய்ய முடியாது. அரசாங்கத்தாருக்கும், கிராமத்தாருக்கும் அவன் செய்ய வேண்டிய கடமைகள் திட்டம் செய்யப்பட்டிருக்கின்றன. அரசாங்கத்தாரின் இஷ்டம்போல் அவன் அப்பதவியை வகித்திருக்கிறான். அவன் ஒவ்வொரு காரியமும் கிராமப் பெரியவர்களின் அபிப்ராயத்தை ஒட்டியே செய்யக் கடமைப்பட்டிருக்கிறான்.

ஆகவே, குடியானவன் நன்றாக அமைக்கப்பட்டுள்ள ஒரு சமூகக் கூட்டத்தைச் சேர்ந்தவன் என்பது இதனால் நன்கு புலப்படுகிறது. அச்சமூகக் கூட்டமானது ஆதிகாலந் தொட்டு அதற்கு வேண்டிய உணவுப் பொருள்கள் முதலானவற்றிற்கும், அக்கூட்டத்தின் ஆட்சிக்கும் தானே அப்பொறுப்பை வகித்து வந்திருக்கிறது என்பது அதன் சரிதத்தால் விளங்குகிறது. ஆகவே, ஓர் உத்தம விவசாயி பிறர் உதவியை எதிர்பாராது தானே தன் வேலைகளைச் செய்கிறான். மேலும், அவனது விவசாய முறையையும் சமூகத்தின் அமைப்பையும் நோக்குங்கால் அநேக காலமாக விவசாயத்தொழிலை செய்து வரும் குடியானவர்கள் உள்ள நாடுகளில் காணும் ஒரு அமைதியும் ஒழுங்கும் இங்கே இவனிடத்தில் காணுகிறோம். அவனும் தனக்கேற்பட்டுள்ள அக்கம் பக்கத்துச் சௌகரியங்களுக்கேற்ப ஒத்து நடந்து வருகிறான்.

இப்பழமையான கிராம அமைப்பில் புதிய உணர்ச்சிகள் பெருகி வருகின்றன. அவை கிராமத்தின் தோற்றத்தையும் அமைப்பையும் பின்னால் அதிகமாக மாற்றும். இப்போதுங்கூடச் சில கிராமங்களில் அப்புதிய மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. இம்மாறுதல்களெல்லாம் பொருளாதாரச் சம்பந்தமானவை, நிர்வாகச்சம்பந்தமானவையாகும்.

பொருளாதார உணர்ச்சிகள் உள்ளும் புறமுமானவை. உள்ளுணர்ச்சியைப் பொறுத்தமட்டில் கைத்தொழில்கள் மெதுவாக இடைவிடாமல் கிராமங்களில் வளர்ந்து வருகின்றன. கிராமங்களில் விளையும் விவசாயப்பொருள்களுக்கும் உண்டாக்கப்படும் கைத்தொழிற் சாமான்களுக்கும் ஏராளமான கிராக்கி இருக்கிறது. பெரும்பான்மையான கைத்தொழில்களெல்லாம், பம்பாய், கல்கத்தா, ரங்கூன், மதராஸ், முதலான இடங்களிலும், வடக்கே சில பட்டணங்களிலும் அதிகமாக இருப்பினும் விவசாயப்பொருள்களிலிருந்து செய்யும் சாமான்களின் பெரும்பான்மையான கைத்தொழில்கள் தற்காலத்தில் பெரிய கிராமங்களிலும், சிறிய பட்டணங்களிலும் வியாபிக்க ஆரம்பித்திருக்கிறது. எண்ணைச் செக்குகள், பஞ்சு அரைத்தல், நெல் குத்தும் ஆலைகள், சர்க்கரை, புகையிலை தொழிற்சாலைகள் எல்லாம் எங்கெங்கே இவற்றிற்கேற்ற பயிர்கள் விளைகின்றனவோ, ரயில் பாதை, கால்வாய், நல்ல ரஸ்தா போன்ற போக்கு வரவு வசதிகள் இருக்கின்றனவோ, போதுமான மின்சார சக்தியும் கிடைக்கின்றனவோ அவ்விடங்களில் மேற்கூறிய கைத்தொழில்கள் ஏற்படுகின்றன. தற்காலத்தில் தேச முழுதும் இத்தொழில்களின் செல்வாக்கு இன்னும் விசேஷமாய் இல்லாவிடினும், இக்கைத்தொழில்கள் உள்ள இடங்களிலெல்லாம் ஜனங்களின் பொருளாதார நிலைமையில் வெளிப்படையான வித்தியாசங்கள் ஏற்பட்டிருப்பதைப் பார்க்கலாம். பட்டணங்

களுக்கும் அப்பால் உள்ள இக்கைத்தொழில்களின் அபிவிருத்தியினால் உள்ளூர் பணக்காரர்கள் தங்கள் பணத்தை அக்கைத்தொழிலில் போடுகிறார்கள். கைத்தொழிற்சாலையில் எப்போது வேலை அதிகமோ அப்போதுதான் குடியானவனுக்கும் ஓய்வு காலம். ஏனென்றால், அவன் அறுத்த மாசூல்தான் யந்திரசாலைக்குச் சென்று அவனது ஓய்வு காலத்தில் அவனுக்கு வேலையைக்கொடுக்கிறது.

சுறுங்கக்கூறின், யந்திரசாலையானது அந்த ஊரில் உள்ள ஜனங்களுக்கு அறுவடையான பின்பு வேலை இல்லாத காலங்களில் வேலையைக் கொடுக்கிறது. ஊரில் பணக்காரரிடமுள்ள பணத்தையும், நன்கு உபயோகப்படுத்துகிறது. இதனால் ஜனங்களுக்குப் புதிய உணர்ச்சிகள் உண்டாகின்றன. யந்திரசாலைகள் ஏற்படுவதாலும், பட்டணங்களில் கைத்தொழில்கள் அபிவிருத்தி யாவதாலும் விவசாயப் பொருட்களுக்கும், மற்ற உணவுப்பொருட்களாகிய பழம், காய்கறிகள், பால், தயிர், வெண்ணை போன்றவைகளுக்கும் ஏராளமான கிராக்கி உண்டாகிறது. எந்த விடங்களில் இவைகளை உற்பத்திசெய்ய வேண்டிய சௌகரியங்களும், அவற்றை விலையாக்கப் போக்கு வரத்து வசதிகளும் இருக்கின்றனவோ அவ்வவ்விடங்களில் அதிகமாகப்பழங்களையும் காய்கறிகளையும் உற்பத்திசெய்ய உற்சாகங்கொள்ளுகிறார்கள். அதிகப்படியாக உற்பத்திசெய்யும் குடியானவன் தன் பொருள்களை நல்ல விலைக்கு வாங்குகிறான். ஆனால் அவன் தன் குடும்பத்திற்கு வேண்டிய பொருள்களை சாகுபடி செய்வதில்லை. அவற்றை கடையில் விலைக்கு வாங்கவேண்டியவனாக இருக்கிறான். இக் காரணத்தால், கிராமத்தாருக்குவேண்டிய எல்லா பொருள்களையும் முன்போலக்கிராமத்திலேயே பயிர் செய்யாமற்போகிறது. அதனால் தற்காலத்தில் வெளியூர்களிலிருந்து கிராமங்களுக்கு உணவுப்பொருள்கள் வரவேண்டியிருக்கின்றது.

வெளியூர்களிலிருந்து தரகர்களும் வியாபாரிகளும் தானியங்களை வாங்குவதற்குக் கிராமத்திற்கு வருவதால் கிராமத்தாருக்கும் வெளியூர்களுக்கும் சம்மந்தம் ஏற்படுகிறது. முன்காலத்தில் தானியங்களெல்லாம் கிராமத்தார்களின் செலவுக்கு வேண்டியது போக மிகுந்திருக்கும் தானியங்கள் வாங்குவாரற்று களத்தில் செல்லரித்துப்போவதுண்டு. தற்காலத்தில் அம்மாதிரி கிடையாது. ஏனெனில் தற்காலத்தில் மேலே சொன்ன மாதிரி, குடியானவர்கள் பெரும்பாலும் உணவுப் பொருள்களைப் பயிர் செய்வதில்லை. பணப்பயிர் என்று சொல்லப்படும் பருத்தி, ஆமணக்குக்கொட்டை, சணல், தேயிலை, காப்பிக்கொட்டை போன்றவற்றைத்தான் இந்தியவிவசாயிகள் தற்காலத்தில் அதிகமாகப்பயிரிடுகிறார்கள். இந்நாட்டுப் பொருள்களெல்லாம் உலகிலுள்ள பிறநாடுகளுக்கு ஏராளமாக ஏற்றுமதி செய்யப்படுகிறது. இம்மாதிரி விவசாயப்பொருள்களை வாங்கி வெளிநாடுகளுக்கு அனுப்ப வட இந்தியாவில் அநேகம் தரகர்களை ஒவ்வொரு கிராமத்திலும் பார்க்கலாம். வெளிநாடுகளுக்கு எப்பொழுது இப்பொருள்கள் ஏராளமாக ஏற்றுமதி செய்யப்படுகிறதோ அப்போது விவசாயியானவன் தன்பொருளை இன்னும் அதிகமான விலைக்கு விற்று லாபத்தை அடைய யெண்ணி, பயிரின் குணத்தையும் இடத்தையும் பலவிதத்தாலும் மேம்படுத்த முயர்ச்சி செய்கிறான். உரம், விவசாய யந்திரங்கள் விற்கும் வியாபாரிகள் முன்போல் பட்டணத்தில் விற்க முயலாமல் இப்போது கிராமங்களிலெல்லாம் விற்கத் தங்களது ஆட்களை வைத்திருக்கிறார்கள். இம்மாதிரி சில கிராமங்களிலே தான் காணப்படுகிறதெனினும் காலத்தின் போக்கைக்கவனிக்குங்கால் இம்மாறுதல்கள் எல்லாக்கிராமங்களிலும் நாளடைவில் உண்டாகும் என்பதை மறுக்க முடியாது.

ரயில்களும், நதிகளும், கிராமத்தையும் பட்டணத்தையும் ஒன்றோடொன்று சேர்க்கின்றன. மோட்டார்பஸ்கள் அதிகமாக ஏற்பட்டிருக்கும் இக்காலத்தில் ஜனங்கள் அவற்றை அதிகமாக உபயோகப்படுத்துவதாலும் இன்னும் கிராமங்களில் ஏராளமான மாறுதல்கள் ஏற்பட இடமுண்டு. இதனால் கிராமத்தொழிலாளிகளும், வியாபாரிகளும், பட்டணத்துத் தொழிலாளியுடனும் வியாபாரியுடனும் போட்டாபோட்டி போட வேண்டி நேரிடும். பட்டணத்திலிருந்து வியாபாரி தன் சாமான்களை பஸ்ஸில் கொண்டு



வந்து குறைந்த விலைக்கு கிராமத்தாருக்கு விற்கக்கூடும். கிராமத்திலிருந்து பட்டணத்திற்கும் பட்டணத்திலிருந்து கிராமத்திற்கும் பண்டங்கள் மாற்றப்படும். ஆனால் இந்திய கிராமங்களில் இன்னும் பழைய வழக்கங்கள் குடிகொண்டிருக்கின்றன. சர்வ தேசத்திலும் அனுபோகத்தில் இருப்பது போல் இந்திய கிராமங்களில் காலக்கிரமத்தில் போக்கு வரத்து வசதிகள் அதிகரிப்பதாலும் பட்டணங்களின் சம்பந்தம் கிராமங்களுக்கு ஏற்படுவதாலும் ஜனசமூகத்தின் பொருளாதார நிலைமையும் சமூக வாழ்வும் நன்மைக்கே மாறுதலடையுமென்பது திண்ணம். இதனால் கிராமத்தார் புத்தி கூர்மையடைவதுடன் புதிய எண்ணங்களையும், அறிவையும் ஏற்றுக்கொள்ளவும், புதிய சந்தர்ப்பங்களைக் கைப் பற்றிக்கொள்ளவும், ஆவலுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

## கிராம நிர்வாகம்

கிராம நிர்வாக விஷயங்களில் கிராமங்கள் முன்போல் விலகித் தனிமையாயில்லாமல் நாட்டின் ஏனைய பாகங்களோடு சேர்ந்து வாழ ஆரம்பித்திருக்கிறது. 1919-ம் வருஷம் முதற்கொண்டு, 1926-ம் வருஷம் வரை அநேகம் ஸ்தல ஸ்தாபன சுய ஆட்சி மசோதாக்களினால் கல்வி, சுகாதாரம் போன்றவைகளையும் இன்னும் சில வற்றினையும், அநேக மாகாணங்களில் கிராமப் பஞ்சாயத்தாரிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. இக்கிராமப் பஞ்சாயத்துக்கள் பல கிராமங்களுக்கும் சேர்ந்து ஒன்றாகவும், கிராமத்திற்கொன்றாகவும், கிராமத்தின் ஜனத்தொகையையும், விஸ்தீரணத்தையும் பொறுத்து ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. பாதைகளைச் சரியான நிலைமையில் வைத்துக்கொள்வது, குடிகளுக்கு ஜல வசதி செய்து கொடுப்பது, சாக்கடை, குளம், குட்டை இவற்றை சுத்தஞ் செய்வது, புதிய பாதைகள் அமைப்பது, பாலம் முதலிய வற்றைப் பழுது பார்ப்பது, கிராமங்களில் அசுத்தம் பரவவொட்டாது தடுப்பது, பொதுக் கட்டிடங்களைக் கண் காணிப்பது, மேய்ச்சல் தரைகளைப் பாதுகாப்பது, கிராமங்களுக்கு விளக்குப் போடுவது, பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி நிர்வகிப்பது போன்ற இவையெல்லாம் கிராமப் பஞ்சாயத்தாரிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. இப்பஞ்சாயத்துக்கள் சில குற்றங்களை விசாரித்துக் குற்றவாளிகளைத் தண்டிக்கலாம். அவற்றின் செலவெல்லாம் கிராம நிதியினின்றும் கொடுக்கப்படுகிறது. கிராமப் பஞ்சாயத்து விதிக்கும் வீட்டு வரி, சில்லரை வரிகள், ஜில்லா போர்டார், தாலுக்கா போர்டார், அரசாங்கத்தார் கொடுக்கும் உதவி நிதி, இவையெல்லாம் சேர்ந்தது கிராம நிதியாகும். இப்பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் முழுவதும் இன்னும் உபயோகிக்கப்படவில்லை. உபயோகிக்க ஆரம்பித்த இடங்களில் இன்னும் அவை தீவிரமாக அமுலுக்குக் கொண்டுவா முடியாமலிருக்கிறது. பஞ்சாயத்தை சரிவர நடத்துவதில் அனுபோகமின்மையும், கிராமத்தில் புது வரிகளைப்போட மனமில்லாமையுமே காரணம். எனினும், தற்காலத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தினால் கிராம நிர்வாகத்தை முன்னிலும் அதிக ஒழுங்காக நடத்தவும், ஜில்லா மாகாணத்து நிர்வாகத்துடன் இணைக்கவும் அனுகூலங்கள் ஏற்பட்டிருக்கின்றனவென்பது வெளிப்படை. மாகாண நிர்வாக விஷயம், கிராம நிர்வாக அமைப்பைப் பொறுத்திருக்கிறது என்ற ஒரு தத்துவம் கிராமங்களுக்குப் பஞ்சாயத்து மூலமாய் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தை கவனிக்குங்கால் நன்கு விளங்குகிறது.

ஆகவே தற்காலத்தில் ஸ்தல ஸ்தாபன சுய ஆட்சி விஷயங்களில், கிராமத்தையே அரசியல் முறையில் அடிப்படையாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதை வற்புறுத்தப்பட்டு வருகிறது. பொதுவாக, கிராமத்தார் நிர்வாக விஷயத்தைப் பொருத்த மட்டில் கிராமத்தில் சுய ஆட்சி ஸ்தாபனங்களை ஏற்படுத்தி விருத்தி செய்யவும், அத்துடன்கூட மாகாணப் பெருவாழ்வில் கலந்து கொள்ளவும் போதுமான சௌகரியம் ஏற்பட்டிருக்கிறது. கிராமங்கள் ஒன்றுக்கொன்று அதிக தூரத்திலிருப்பதாலும், ஜனத்தொகை மிகவும் குறைச்சலாயிருப்பதாலும், பண நெருக்கடியாலும், உழைக்க ஆட்களில்லாமையாலும், அரசாங்கத்தார் இக்கிராமத்தார்களுக்கு கிராமங்களின் முன்னேற்றத்தையொட்டிய சில விஷயங்களை மாத்திரமே எடுத்துக் காட்ட முடிந்தது. இதற்கதிகமாக அவர்கள் ஒன்றும் செய்ய முடியவில்லை.

## ஆரோக்யம்

விவசாயத்தொழிலுக்கும், ஜனங்களின் தேகாரோக்கியத்திற்கும் அதிக சம்பந்தமுண்டு. வியாதியால் உண்டாகும் பொருள் நஷ்டம் இவ்வளவென்று கணக்கிட முடியாது. மலேரியா ஜுரம் ஆயிரக்கணக்காய் ஜனங்களை கொள்ளை கொண்டு போகிறது. லக்ஷக்கணக்கான ஜனங்களை வலிமையற்றவர்களாக்கி ஒரு தொழிலுக்கும் உதவாமல் செய்து விடுகிறது. பிளேக்கும் காலராவும், அடிக்கடி நாடு முழுதும் பரவி கஷ்டம் விளைவிக்கின்றன. கொக்கிப் புழுவினாலும் காலஜார் ஜுரத்தாலும், போதுமான ஆகாரமின்மையால் ஏற்படும் பல வியாதிகளாலும், விவசாயிகளின் தொழில் திறமையும், தேகவளமையும் குன்றிவிடுகின்றன. ஆகவே விவசாயத்தைப் பற்றி நடத்தும் விசாரணையில் நாம் குடியானவர்கள் சுகாதாரத்தைப்பற்றி விசாரிக்க வேண்டிய தவசியம். அவனுக்குகந்த ஆகாரம், அவன் வசிக்கும் இடங்களின் சுகாதார நிலைமை, கிராம வாழ்க்கையின் நிலைமை, இவற்றைக் கவனிக்க வேண்டும். கிராமாந்தரங்களில் இந்நிலைமைகளெல்லாம் மிகவும் சேவலமாயிருக்கின்றன. சுகாதாரம் என்பதே கிடையாது, நதிக்கரையும், குளக்கரையும், கக்கூசாக உபயோகப்படுத்தபடுகிறது. அசுத்தமான நதிஜலத்தையும் குளத்து ஜலத்தையும் ஜனங்கள் குடிக்கவும் குளிக்கவும் உபயோகப்படுத்துகிறார்கள். இதனாலும் பல வியாதிகள் உண்டாகிறது. இதை விட மைதானங்களில் மலஜலங்கழித்தல் சாலச்சிறந்ததெனினும் கக்கூசுப்பட்டிகளின் உபயோகத்தையும், வெளியில் கண்டவிடங்களில் மலஜலங்கழிப்பதால் உண்டாகும் அசௌக்யத்தையும் எடுத்துச் சொல்ல வேண்டும். இம்மாதிரி சுகாதார விஷயங்களில் குடியானவனுக்குப் போதுமான அறிவு வந்ததும் அவன் கக்கூசுப்பட்டிகளின் உபயோகத்தையும் அவற்றைச் சுத்தமான நிலையில் வைத்துக்கொள்ளவும் நன்கறிந்துகொள்வான். அச்சமயத்தில் கக்கூசுகளைக்கட்டி வைப்பதுதான் மிக்க நன்மையையுண்டாக்குமென்பது எங்களுடைய அபிப்ராயம். அதனால் தேகாரோக்யத்திற்கு உள்ள அபாயங்கள் குறைந்து செடிகளுக்காதாரமான எருவு ஒரே இடத்தில் சேர்க்கப்படுகிறது. கைப்பிடிச்சுவர் இல்லாததால் அசுத்தங்கள் வந்து விழும் கிணறுகள், குளங்கள், குப்பை வாறாமல் குப்பை நிறைந்து துர்க்கந்தம் வீசும் வீதி, ஜன்னல்களும், வெளிச்சமும், காற்றோட்டமும் இல்லாத வீடுகள், இவற்றினிடையே குடியானவன் அதிசயிக்கத்தக்க வண்ணம் சுத்தமான நிலையில் ஆரோக்கியத்துடன் தன் காலத்தைக் கழித்து வருகிறான். கிராமத்திலுள்ளவர்களெல்லோரும் ஒன்று சேர்ந்து இக்குறைகளை வெகு எளிதில் நீக்கிக் கொள்ள வேண்டிய சௌகரியங்கள் இருந்தும் கிராமங்கள் இக்காலத்தும் இந்நிலைமையில் இருப்பது வருந்தத்தக்கது. கிணற்றுக்குள் அசுத்தங்கள் வந்து விழாதபடி எல்லாரும் சேர்ந்து ஒரு கைப்பிடிச்சுவரைக் கட்டிக்கொள்ளலாம். கிராமத்தைச் சுத்தமாய் வைத்துக்கொள்ள வீதிகளிலுள்ள குப்பைகளை அப்புறப்படுத்தச் செய்யலாம். நதி, குளம், குட்டைகளை அசுத்தப்படுத்தாமலிருக்க கிராமத்தில் கக்கூசு கட்டி வைக்கலாம் ஜனங்களைக் கட்டுப்படுத்தலாம். இவற்றினால் கிராமங்களின் சுகாதார நிலைமை வெகு சீக்கிரத்தில் முன்னேற்றத்தையடையும் என்பதில் சிறிதேனும் சந்தேகமில்லை.

சுகாதார விஷயமாக நாங்கள் இந்திய அரசாங்கத்தாருடையவும், மாகாண அரசாங்கத்தாருடையவும் பிரதிநிதிகளை விசாரித்தோம். அதிலிருந்து தற்காலத்தில் சுகாதார விஷயமாய் முற்போக்கான இயக்கம் இந்நாடு முழுதும் இருக்கிறதென்று அதிலிருந்து நாங்கள் தெரிந்து கொண்டோம். சென்ற எட்டு வருஷங்களாக இந்திய அரசாங்கத்தார் விடாமுயற்சியுடனும், மனோ திடத்துடனும் வைத்திய பரிசோதனையை நடத்தி வந்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. சுகாதாரத்தைப்பற்றிய நூதனக்கொள்கைகளை அனாதிகாலமாக மதசம்பந்தமான பழக்க வழக்கங்களுக்குக் கட்டுப்பட்டிருக்கும் ஜனங்களை பலவந்தத்தின்மேல் ஏற்றுக்கொள்ளச் செய்வது கூடாது என்பது யாவரும் அங்கீகரிக்கக்கூடிய விஷயமாகும்.

ஆகவே, வைத்திய விஷயமாகவும் சுகாதார விஷயமாகவும் பரிசோதனைகளையும் ஆராய்ச்சிகளையும் செய்யவேண்டும். அவற்றை ஜனங்களின் மனப்பான்மைக்கேற்ப ஒழுங்கான முறையில் பிரசாரம் செய்து ஜனங்களுக்குச் சுகாதார



விஷயங்களில் ஒரு ஊக்கத்தையும், உணர்ச்சியையும் உண்டாக்கினால், பிற்பாடு வைத்திய முறையிலும், சுகாதார முறையிலும், ஏற்பட்டுள்ள புதிய எண்ணங்களை நாம் அமுலுக்குக் கொண்டு வரக்கூடும். இம்மாதிரியே கிராமங்களிலும் இவ்வுணர்ச்சி ஜனங்களுக்கு ஏற்படுமேயாகில், கிராமங்களின் சுகாதார நிலைமை வெகு சீக்கிரத்தில் சீரான நிலைமைக்கு வரும் என்பதில் சந்தேகமில்லை. அம்மாதிரி மாறுதல்கள் ஏற்பட வேண்டின் சுகாதார இலாகாவின் சிப்பந்திகளை இன்னும் அதிகரித்தால்தான் இம்மாதிரி உணர்ச்சி ஏற்படும். இம்மாதிரியே சிப்பந்திகளும் இப்போது எல்லா மாகாணங்களிலும் அதிகரித்து வருவதாக நாங்கள் அறிந்தோம். மேலும், மாகாணச் சட்டசபைகளும்கூட சுகாதார விஷயங்களில் அதிக ஊக்கங்காட்டி அவற்றைப் பரவச் செய்ய ஒரு உற்சாகத்தையும் காட்டி வருவது எங்களுக்குக் களிப்பையளித்தது.

தற்காலத்திய அரசியல் முறைப்படி சுகாதாரவிலாகாவானது ஜனப்பிரதிநிதிகளிடத்திலிருக்கிறது. இவற்றின் நிர்வாகம் முழுதும் லோகல் போர்டார், நகர சபைகள், யூனியன்கள் வசம் இருக்கின்றது. அரசாங்கத்தார் அதன் விஷயமாகக் கைதேர்ந்த உத்தியோகஸ்தர்களைக் கொண்டு புதிய முறைகளைத் திட்டப்படுத்தி அமுலுக்குக் கொண்டு வருவது ஜனங்களைச் சார்ந்ததாயிருக்கிறது.

தேச முழுவதும் வியாதிகளால் உண்டாகும் மரணத்தையும், வியாதிகளுக்குள்ள காரணங்களையும், முன் ஜாக்கிரதையான முறைகளைக் கொண்டும் சுகாதார இலாக்காவின் உதவியைக் கொண்டும் குறைக்க வேண்டுமென்றும் எல்லா மாகாணத்திலும் அக்கரை ஏற்பட்டிருக்கிறது. சில வருஷங்களாகவே இவ்விஷயங்களில் முற்போக்கான இயக்கம் இருந்து வருகிறது. ஜனங்களுக்கு ஜலவசதி, சுகாதாரம் போன்ற விஷயங்கள் யாவும் அதிகமாகக் கவனிக்கப்பட்டு வந்திருக்கின்றன.

## சுகாதாரத் திட்டம்

1923-ம் வருஷத்தில் சென்னை மாகாணத்தில் சுகாதாரத்திட்டம் ஏற்படுத்தப்பட்டு ஒவ்வொரு ஜில்லாவிலும் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. ஜில்லாதோறும் இப்பொழுது தேர்ச்சி பெற்ற ஒரு ஹெல்த் ஆபீசர் இருக்கிறார். ஒவ்வொரு தாலுக்காவிலும் ஹெல்த் ஆபீசரின் மேற்பார்வையில் ஒரு ஹெல்த் இன்ஸ்பெக்டரும் வேலை செய்து வருகிறார். தற்காலத்தில் 26 ஜில்லா ஹெல்த் ஆபீசர்களும், 261 ஹெல்த் இன்ஸ்பெக்டர்களும், சென்னை ராஜதானியில் வேலை செய்துவருகிறார்கள். சுகாதார இலாக்காவைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களெல்லாம் சர்க்கார் உத்தியோகத்தில் இருப்பவர்கள். அவர்கள் லோகல் போர்ட் முதலியனவைகளுக்கு 1920 ம் வருஷத்து லோகல் போர்ட் ஆக்டில், சுகாதாரம், கிராமப்பொதுநலம், இவற்றைப் பற்றிய திட்டங்களை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு வேண்டிய உதவி செய்வதற்காகவே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஹெல்த் ஆபீசர்களின் சம்பளம் முழுதும் சர்க்காரால் கொடுக்கப்படுகிறது. ஆனால் கொள்ளைநோய்களைத் தடுப்பதில் ஏற்படும் செலவும், சுகாதார அபிவிருத்திக்காக ஏற்படும் செலவும், லோகல் போர்ட்டார் கொடுக்கிறார்கள்.

ஹெல்த் ஆபீசரின் கடமை என்னவென்பதைக் கவனிப்போம். கிராமங்களில் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் பரவும் வியாதிகளை அங்ஙனம் பரவவொட்டாமல் தடுப்பது, அம்மை குத்தலின் மேற்பார்வை, ஜனனமரணக்கணக்குத் தணிக்கை முதலியவையேயாகும். இத்துடன்கூட கிராமத்தில் ஜலவசதிக்கேற்ற திட்டம், சிறு சுகாதாரவேலைகள், கிராமத்தின் சாக்கடைகளைப் பழுது பார்த்தல் போன்ற விஷயங்களையும் இவர்கள் கவனித்துவருகிறார்கள். காலரா, பிளேக் வருங்காலங்களில் அந்நோய்களைப் பரவவொட்டாமல் அண்டை ஜில்லா ஹெல்த் ஆபீசர்களின் சகாயத்தைக்கொண்டு அவற்றைத் தடுக்க வேண்டியதும் அவர்களின் கடமையாகும். கொக்கிப்புழு நோய், இன்னும் இதைப்போன்ற மற்ற கொள்ளை நோய்களைத் தடுக்கும் வழியையும் தேடுவார்கள்.

இந்த ஏற்பாட்டினால் அநேகம் நன்மை ஏற்பட்டிருக்கிறது. அம்மை குத்துதல், ஜனன மரணக் கணக்கு வந்திருக்கின்றன. கண்ணாடிப்பட மூலமாயும், காகிதப்பட மூலமாயும், செய்த பிரசாரத்தினால் ஜனங்களின் சுகாதார அறிவு

அதிகரித்திருக்கிறது. பள்ளிக்கூடங்களில் மாணவர்கள் கட்டாயமாய் தேகபரீக்ஷை செய்யப்படுகிறார்கள். ஆரோக்ய வழியும் ஜனங்களுக்குப் போதிக்கப்படுகிறது. ஜனங்களிடையே இவ்வியக்கம் இன்னும் அதிகமாகப் பரவ வேண்டுமென்றும், அதற்கு அதிகமான ஊழியர்கள் வேண்டுமென்றும், பொதுஜன ஊழியர்கள் கேட்கிறார்கள். இவ்விஷயங்களில், யாராவது முன்னின்று வழிகாட்டினால் பின்னால் ஜனங்கள் அவ்வழியில் செல்லத்தயாராக இருக்கிறார்கள் என்பது இதனால் நன்கு விளங்குகிறது.

பம்பாய் மாகாணத்திலே ஆஸ்பத்திரிகளுக்கும் மருந்துசாலைகளுக்கும், வைத்தியர்களுக்கும். எட்டாத தூரத்திலிருக்கும் கிராமங்களுக்கு வைத்திய உதவி செய்ய ஒரு புதிய திட்டம் ஏற்பாடாயிருக்கிறது. இத்திட்டத்தின்படி கிராமப்பள்ளிக்கூடத்து உபாத்தியாயர்கள் இரண்டரை மாதம் ஆஸ்பத்திரியில், கிராமத்தாருக்கு சமயோசித வைத்திய உதவி செய்வதற்கான பயிற்சி பெறுகிறார்கள். பயிற்சி முடிந்ததும் ஊருக்குச் சென்று கிராமத்தாருக்கு வைத்திய உதவி புரிகிறார்கள். இம்மாதிரி பயிற்சி பெறுவதற்காக 5 ஜில்லாக்களிலிருந்து 30 பேர் 1000 அல்லது 1500 ஜனத்தொகையுள்ள கிராமங்களிலிருந்து வருகிறார்கள். தங்கள் பள்ளிக்கூட வேலையுடன் கிராமத்தாருக்குள்ள சிறிய நோய்களுக்கு வைத்தியம் செய்கிறார்கள். அப்படி அவர்களால் வைத்தியம் செய்ய இயலாத இடத்தில் சமீபத்திலிருக்கும் பெரிய ஆஸ்பத்திரிக்குச் சிகிச்சைக்கு அனுப்பி விடுகிறார்கள். இத்திட்டம் அமுலுக்கு வந்த ஆறு மாதங்களில் சுமார் 1,20,000-க்கு மேற்பட்ட ஜனங்கள் வைத்திய உதவி பெற்றிருக்கின்றனர். இவர்கள் செய்து வந்த வேலை திருப்திகரமாகவே இருந்ததென்று லோகல் போர்டாரும், ஜில்லா கலெக்டரும், ஆஸ்பத்திரி டாக்டர்களும் அபிப்ராயப்பட்டிருக்கிறார்கள். இந்நாட்டில் கிராமங்களெல்லாம் பெரிய பட்டணங்களுக்கருகாமையில் இருப்பதால் பட்டணங்களிலிருக்கும் அதிகாரிகள் வந்து மேற்பார்வை செய்ய சௌகரியமாயிருக்கிறது. மேற்கூறியபடி வைத்தியப் பயிற்சிக்கு எந்தப் பள்ளிக்கூடத்தில் இரண்டு அல்லது அதற்கு அதிகமான உபாத்தியாயர்கள் இருக்கிறார்களோ அப்பள்ளிக்கூடத்துத் தலைமை உபாத்தியாயரைத்தான் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கிறார்கள். இம்மாதிரி பயிற்சி பெற்று வேலை செய்யும் உபாத்தியாயர்களுக்கு சொற்ப ஊதியமும் கொடுக்கப்படுகிறது.

வைத்திய சிகிச்சைக்கு வேண்டிய சௌகரியங்களைக் கிராமங்களில் பரப்புவதற்கென்றேற்பட்ட திட்டத்தில் சில மாகாணங்களில் மற்றொரு திட்டமும் இருக்கிறது. அதன்படி வைத்திய சாஸ்திரத்தில் பயிற்சி பெற்ற வைத்தியர்களுக்கு மாதாமாதம் சொற்ப சம்பளம் கொடுத்து கிராமத்தில் போய் வசிக்க ஒரு திட்டம் ஏற்படுத்தி இருக்கிறார்கள். அவர் வைத்தியப் பயிற்சியோடு நல்ல படிப்பாளராயும் ஒரு நல்ல அந்தஸ்துள்ளவராயுமிருந்தால் கிராமத்தின் பொது வாழ்க்கையிலேயே நல்ல நிலைமை ஏற்படக்காரணமுண்டு. பட்டணவாசத்தின் டம்பமான வாழ்வையும், அதிகப் பணச்செலவையும், இன்னும் ஏனைய கஷ்டங்களையும் கவனிக்குமிடத்து அநேகம் வைத்தியர்கள் சிறிய பட்டணங்களையும், கிராமங்களையும் நாடுவார்கள் என்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை. இங்ஙனம் அரசாங்கத்தார் பயிற்சி பெற்ற வைத்தியர்களுக்கு பண உதவி செய்தால் அநேகம் வைத்தியர்கள் கிராமங்களுக்குச் சென்று வசிப்பதற்கு ஒரு பெரிய தூண்டுகோலாயிருக்கும். காலக்கிரமத்தில், கிராமத்தில் வசிக்கும் வைத்தியர், கிராமத்தைப்பற்றிய எல்லா விஷயங்களிலும் தலைமை வகித்து கிராமத்தாருக்கு தம்மாலியன்ற உதவி செய்வார் என்பதில் சந்தேகமில்லை. இம்மாதிரியான திட்டங்களெல்லாம், சரியாக அமுலுக்குக்கொண்டு வரப்பட்டால் பெரும் நன்மைகள் விளையும். ஆகவே மேற்கூறிய திட்டங்களை இந்நாட்டின் நன்மையைக் கோரும் ஒவ்வொருவரும் கட்டாயம் ஆதரிக்கவேண்டியது அவசியம்.

## மருத்துவம்.

சமூகத்தின் பொது நலத்திற்கு அடிப்படையாயிருப்பவைகளில் ஜனங்களுக்குக் கிடைக்கும் மருத்துவ உதவி ஒன்றாகும். தற்காலத்தில் நாட்டிலெங்கும் மாதர்களை மருத்துவத் தொழிலில் பயிற்றுவித்து ஆங்காங்கு சிறிய பட்டணங்களிலும், நகரங்களிலும். ஜனங்களுக்கு உதவி செய்வதற்காக நியமித்திருக்கிறார்கள். இதுகாலம் வரை நகரசபைகளுக்கு வெளியில் இத்துறையில் அதிகமான அபிவிருத்தி ஏற்படாவிட்டாலும் அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்பதைக் கேட்க யாவரும் திருப்தி கொள்வார்கள். இத்துறையில் முன்னேற்றமடைய வேண்டுமானால் பிரசவ வேதனையினின்றும் உண்டாகும் அளவில்லாக் கஷ்டங்களையும், உயிர்ச்சேதங்களையும், ஜனங்கள் நன்கு அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். இது விஷயமாய் அநேக மாகாணங்களில் சட்டங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இது ஒருபுறமிருக்க குழந்தைகளின் க்ஷேமத்திற்காகவும், தாய்மார்களின் க்ஷேமத்திற்காகவும், ஏற்பட்டிருக்கும் சங்கங்களிலுள்ள எல்லா ஸ்திரீகளும் இது விஷயமாய் சிரத்தை எடுத்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் இத்தகைய சங்கங்கள் எல்லாம் பட்டணங்களிலேதானிருக்கின்றன. இவை சிசு சம்ரக்ஷணைச் சங்கங்களையும், பிரசவ ஆஸ்பத்திரிகளையும் ஏற்படுத்துவதிலும், பயிற்சி பெற்ற மருத்துவச்சிகளைத் தயார் செய்வதிலும் சிரத்தை எடுத்துக்கொள்ளுகின்றன.

பஞ்சாப் மாகாணத்தில் கர்க்கோன் ஜில்லாவில் உற்சாகம் மிகுந்த டிப்டி கமிஷனரான கனம் பிரேயனும், அவர் மனைவியும் நடத்தி வரும், கிராமப்புனருத்தாரண வேலையில் இது ஒரு முக்கிய அம்சமாயிருக்கிறது. இக்கிராமங்களுக்குச் சென்று உதவி செய்ய இப்போது நான்கு ஸ்திரீ ஹெல்த் விசிட்டர்கள் இருக்கிறார்கள். கர்ப்பிணிகளுக்கு முன் ஜாக்கிரதையான விஷயங்களைப்பற்றியும், தகுந்த செவிலித்தாய்மார்களை தெரிந்தெடுக்கும் விஷயமாகவும் அவர்கள் புத்திமதி சொல்லுகிறார்கள். செவிலித்தாய்மார்கள் ஜில்லா ஆஸ்பத்திரியில் பயிற்சி பெறுகிறார்கள்.

## கிணறுகள்

எங்கள் யாத்திரையில் நாங்கள் சென்ற இடங்களில் பெரும்பாலான கிராமங்களில் ஜலவசதி வேண்டுமென்று ஜனங்கள் கேட்டதைப்பற்றி நாங்கள் மிகுதியும் ஆச்சரியமடைந்தோம். கிராமங்களிலுள்ள நடை கிணறுகளையெல்லாம் சேந்து கிணறுகளாகச் செய்து கைப்பிடிச்சுவர் கட்டிவைக்கவேண்டுமென்று நாங்கள் ஸ்தல சுய ஆட்சி ஸ்தாபனங்களை வற்புறுத்துகிறோம். வேறு ஜலவசதிகளில்லாத விடத்தில் குழாய்க் கிணறுகள் வெட்டுவதினால் போதுமான அளவு தண்ணீர் கிடைக்கும். இவைகளெல்லாம் கிராமத்தார் பிறர் உதவியின்றிச் செய்ய முடியாது. இந்த விஷயங்களிலெல்லாம் பணம் தான் முக்கியம். பணம் வசூல் செய்வதில் கிராமத்தார்களுக்குச் சாமர்த்தியம் போதாது. சமீபத்தில் சில மாகாணங்களில் ஏற்பட்டுள்ள சட்டங்களால் லோகல் போர்டுகளுக்கும், கிராம அதிகாரிகளுக்கும், புதிய வரி. விதிப்பதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அச்சட்டங்கள் பிரத்தியேகமான ஒரு காரியத்திற்கென்று வரி விதிக்கும் அதிகாரத்தைக் கொடுக்கவில்லை. உதாரணமாக, பொதுவாக ஒரு வரி விதித்தால் கிராமத்தாரெல்லாரும் ஆக்ஷேபிப்பது சகஜம். ஆனால் ஒரு கிணற்றுக்காகவோ அல்லது குளத்திற்காகவோ ஒரு வரி விதிப்பதென்றால் எவரும் ஆக்ஷேபிக்கமாட்டார்கள். ஏற்கனவே, சில லோகல் போர்டார் சுகாதார விஷயமாயும், குடி தண்ணீர் விஷயமாயும், வேண்டிய ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறார்கள். ஜலத்தினின்றும் பரவக்கூடிய வியாதிகளைத் தடுக்கப் பொது நிதியினின்றும் செய்யும் பணச்செலவினால் உண்டாகும் நன்மையைக்கவனிக்குமிடத்து அரசாங்கத்தார் கிராமவாசிகளுக்கு வேண்டிய தண்ணீர் வசதி செய்து கொடுப்பதாகச் செலவு செய்யும் ஒவ்வொரு தம்படியும் ஜனங்களுக்கு நன்மையையேதான் செய்யும் என்பதில் சந்தேகமில்லை.

கிராமப் பொது ஜனங்கள் சுகாதார விஷயத்திலும், சமூக நலத்திலும், அதிக ஊக்கமும் உற்சாகமும் காட்டி வருவதைக்கண்டு நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். இந்த உணர்ச்சி ஜனங்களிடத்து காணப்படுவதைக் கண்ட எங்களுக்கு ஒரு நம்பிக்கையும், தைரியமும் உண்டாயிற்று. இப்புதிய உணர்ச்சி ஒரு மாகாணத்திற்குரியதல்ல; எல்லா மாகாணங்களிலுமுண்டு. இவைகளில் முக்யமான சமூக ஊழியச் சங்கங்களைப்

பற்றி நாங்கள் கீழே சில வார்த்தைகளைச் சொல்ல உத்தேசிக்கிறோம்.

## பூணா சேவ சதனம்

காலஞ்சென்ற திரு. கோபாலகிருஷ்ண கோகலே ஸ்தாபித்த இந்திய ஊழியர் சங்கம் செய்து வரும் சமூகப் பொதுநல ஊழியத்தைக் கவனிக்குங்கால் பொது ஜனங்கள் சமூக முன்னேற்றத்தின் பொருட்டு என்ன செய்ய முடியுமென்பது நன்கு விளங்கும். பெண்கல்வியை அபிவிருத்தி செய்யவும், இந்தியப்பெண்மக்களின் சமூக நிலைமையை மேம்படுத்தவும் இந்திய ஊழியர் சங்கத்தின் ஆதரவின் கீழ் 1910-ம் வருஷம் பூணாவில் சேவ சதனம் என்ற சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. அச்சங்கத்தின் பெண்மக்களுக்கு நூற்கல்வி, வைத்தியக்கல்வி, போன்ற உபயோகமுள்ள கல்வி போதிக்கப்படுகிறதென்றாலும் அச்சங்கத்தில் ஸ்திரீகளுக்கு வைத்தியக்கல்வி கற்றுக்கொடுக்கப்படுகிறது. அதன் கடைசி வருஷ அறிக்கைப்பத்திரத்தில் 78 பெண்கள் மருத்துவப்பயிற்சியும், சிகிச்சைப்பயிற்சியும், பூணாவில் உள்ள சர்க்காரால் நடத்தப்படும் பொது வைத்தியப் பள்ளிக்கூடங்களில் பெற்று வருவதாகக் கண்டிருக்கிறது. ஆமத்நகரிலும், கோலாபுரியிலும், பிரசவஆஸ்பத்திரிகளை யொட்டி சிசுசம்ரக்ஷணை ஸ்தலங்கள் ஏற்படுத்தப் பட்டு, ஆமத்நகரில் 148 பெண்களும், கோலாப்பூரில் 117 பெண்களும், மருத்துவத்திலும், சிசு சம்ரக்ஷணைத் தொழிலும் பயிற்சி பெற்று வருகிறார்கள். நாகபூரிலும் குவாலியரிலுமுள்ள கிளைஸ்தாபனங்களிலுங்கூட பெண்களுக்கு இம்மாதிரி பயிற்சி கொடுக்கப்பட்டு வருகின்றன. மேற்கூறிய இரண்டிடத்திலுமுள்ள ஸ்தாபனங்கள் வைத்தி சாஸ்திரப் பயிற்சியுடன் சிசு சம்ரக்ஷணை கூடங்களையும் நடத்துகின்றன. இலவசமா ஏழைக் குழந்தைகளுக்குப் பால், மருந்து, து இவற்றை உதவி கர்ப்பிணிகளுக்கும் இலவசமா மருத்துவம் செய்யப்படுகிறது. இப்பூணாவிலுள்ள சேவசதனம் இன்னும் பலவிடங்களில் 7 சி சம்ரக்ஷணைக் கூடங்களையும், 5 மருத்துவ ஆஸ்ப திரிகளையும், நடத்திவருகிறது. ஜில்லாக்களி சென்று உதவி செய்யப் பயிற்சி பெற்ற அநேக மருத்துவச்சிகள் இருக்கின்றார்கள்.

## ஒய். எம். ஸி. ஏ.
## கிராமப்புனருத்தாரண வேலை.

மற்றொரு வேலை கிராமப்புனருத்தாரண வேலையாகும். யௌவன கிறிஸ்தவ வாலி சங்கத்தார் தென் இந்தியாவில் இம்மாதிரியா கிராமப்புனருத்தாரண வேலைசெய்து வருகிறா கள். சென்னைமாகாணத்தில் கோயம்புத்தூரு கருகாமையிலிருக்கும் ராமநாதபுரத்திலே கிரா ப்புனருத்தாரண ஸ்தலத்தை சென்று பார் தோம். சந்தையில் படங்கள் மூலியமாயு புஸ்தகங்கள் மூலியமாயும், துண்டுப் பிரசுரங்க மூலியமாகவும், நாடகமூலியமாகவும், கூ டுறவு கல்வி, சுகாதாரம் இவற்றால் எப்ப வாழ்வைச் சீராக்கிக் கொள்ளலாம் என்பதை பற்றி எல்லாம் இப்புனருத்தாரண ஸ்தலத்தி உழைக்கும் ஊழியர்கள் ஜனங்களுக்கு எடுத்து சொல்லுகிறார்கள். சமீபத்தில் அவர்கள், கி மத்தில் வேலைசெய்வதற்காக, வாலிபர்களா மாணவர்களடங்கிய சங்கமொன்றை ஏற்படுத் இருக்கிறார்கள்.

148727




We are Gold Medalists in all the Exhibitions from 1916 onwards.




சஞ்சீவி குழந்தைகளுக்கு சஞ்சீவி

குரு மருந்துகளை வெல்ல வேறு மருந்து கிடையாது.

அனுபோகத்தில் காணலாம்.


குரு பால் பவுடர்.

குரு
மருந்துசாலை,
திருச்சினாப்பள்ளி


குரு சந்தான சோர்ணம்
ஸ்திரீகளுக்கு சஞ்சீவி.

பதிவு எண் :



# குரு மருந்துகள்

எப்போதும் தங்க மெடல்களை பரிசு பெற்று வருகிறது.

## குழந்தை மருந்துகள் மிக விசேஷமானது.

குரு மருந்துகள் உபயோகமாகாத வீடுகள் கிடையாது

(1) குரு கோரோஜனை மாத்திரை—மலத்தைக் கழித்து வியாதியை போக்கும்
(2) குரு கஸ்தூரி காரமாத்திரை
(3) குரு தைலம்—மகா சஞ்சீவியாக விளங்குகிறது.
(4) குரு பால் பவுடர்—மாட்டுப்பாலை தாய்ப்பாலுக்குச் சமானமாக்குகிறது
( ) குரு பாலர் டாணிக்—ரத்தவிர்த்திக்கு சஞ்சீவி
(6) கக்குவானுக்கு குரு K. சொட்டு மருந்து—கைகண்டது
(7) குரு ஜீமா கழிம்பு—சகல கரப்பான்களுக்கும்
(8) சகலரண கழிம்பு—சகலவிதப் புண்பொடிகளுக்கு
(9) வயிற்றுக் கடுப்பு மருந்து
(10) தேரை நோய்—எலும்புருக்கி நோய்க்கு.
(11) குழந்தைகள் வயிற்றுக் கட்டிக்கு
(12) கெற்ப ஊரல் என்கிற கிரந்தி ரோகத்துக்கு

☞ குழந்தைகளுக்கு இன்னும் மிக அருமையான மருந்துகள் இருக்கிறது.

தங்க மெடல் பரிசுகள்—உயர்ந்த நற்சாட்சியங்கள்
சதா பெற்று வருகிறது.

டாக்டர் எ. மதுரம், திருச்சி

Printed and Published by Dr. A. Mathuram at the Guru Medical Hall Press, Trichinopoly.